வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வீர மலர்

Email : news@eelanadu.lk
மலர் : 06
07.09.2025 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 250
பக்கங்கள் : 16

MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

## கிருஷாந்தி படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப். 07

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று செம்மணியில் நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு செம்மணி வளைவில் நடைபெறும் இந்த நிகழ்வில் அஞ்சலியை தொடர்ந்து, நினைவுப் பகிர்வு, 'வாசலிலே கிருஷாந்தி' கவிதைத் தொகுப்பு வெளியீடு, ஆவண காட்சிப்படுத்தல் என்பன நடைபெறவுள்ளன.

1996ஆம் ஆண்டு செம்மணி முகாமில் நிலைகொண்டிருந்த படையினரால் கைது செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தி குமாரசாமி கூட்டு பாலியல் வன்புணர்வின் பின்னர் செப்ரெம்பர் 7ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். அவரை

15

### அரியாலை மனித புதைகுழி:

# 2ஆம் கட்ட அகழ்வு நேற்றுடன் நிறைவு

- 240 எலும்புக்கூடுகள் கண்டறிவு
- 239 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன
- அடுத்த கட்டம் குறித்து 18இல் முடிவு

- இ. ராஜ்குமார், த. பிரதீபன், பு. கஜிந்தன் -

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 07**

**அரியாலை மனிதப் புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் நேற்று சனிக்கிழமையுடன் நிறைவுக்கு வந்தது. இங்கு 240 எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்டன.**

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் இரு அகழ்வாய்வு தளங்களில் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இரு கட்டங்களாக 54 நாட்கள் இந்த அகழ்வு பணி நடைபெற்றது. முதல் கட்ட அகழ்வு 9 நாட்களும்



2ஆம் கட்ட அகழ்வு 45 நாட்களும் நீடித்திருந்தன.

இந்த இரு கட்ட அகழ்வுகளிலுமாக 240 மனித எலும்புக்கூடுகள்

15

## 12 மணி நேரத்துக்குள் 4 துப்பாக்கிச் சூடுகள்

- அச்சத்தில் தென்னிலங்கை
- தமிழர் ஒருவரும் படுகாயம்

கொழும்பு, செப். 07

தென்னிலங்கையில் 12 மணி நேரத்தில் 4 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில், ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். இவ்வாறு காயமடைந்தவர் ஒரு தமிழர் என்று கூறப்படுகிறது.

கொழும்பு - கிராண்ட்பாஸில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணிக்கு இடம்பெற்ற

15

## அரசை விமர்சிப்போருக்கு கொலை அச்சுறுத்தல்கள்

### எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, செப். 07

"அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக் காட்டுபவர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுகிறது", என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு, கொலை கலாசாரம் நாடு முழுவதும் பரவி வருகிறது. இதனால் பொதுமக்களின் உயிர்கள் இழக்கப்படும் நேரத்தில், அரசாங்கத்தை நேர்மறையாக விமர்சிக்கும் குழுக்களைக்கூட அச்சுறுத்தும் ஒரு திட்டம் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

15



வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழாவின்போது...!

## மனித உரிமை ஆணையரின் அறிக்கையை ஏற்கமுடியாது!

### இலங்கை அரசாங்கம் பதில்

கொழும்பு, செப். 07

"ஐ. நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை ஏற்க முடியாது. ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும் சமநிலையுடனும் அமைய வேண்டும்", இவ்வாறு ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி பணிமனை தெரிவித்துள்ளது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு நாளை ஆரம்பமாகிறது. இதில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பிலேயே ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி பணிமனை மேற்கண்டவாறு கூறியுள்ளது.

மேலும், "மனித உரிமைகள் பேரவையின் 57/1 தீர்மானத்தை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொறுப்புக்கூறல் திட்டத்தை நாம் தொடர்ந்து எதிர்க்கிறோம். இது போன்ற வெளிப்புறத் திட்டங்கள் உள்நாட்டு

15

## மன்னாரில் சிறுமி வன்புணர்வு சகோதரர்களுக்கு 7 வருட சிறை

மன்னார், செப். 07

சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை - அதற்கு உதவியமைக்காக சகோதரர்கள் இருவருக்கு 7 வருடங்கள் கடூழிய சிறை தண்டனை விதித்தது மன்னார் மேல் நீதிமன்றம்.

குற்றத்தின் பாரதூரதன்மை, பாதிக்கப்பட்ட சிறுமியின் நிலை, மேலும் இவ்வாறான குற்றங்கள் இடம்பெறாமல் இருக்க வேண்டும் என்பதற்கு அமைவாகவே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன், குற்றவாளிகள் சிறுமிக்கு 5 இலட்சம் ரூபாயை நட்டஈடாக வழங்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுமியை வன்புணர்ந்த சகோதரருக்கும் இதற்காக அவருக்கு உதவிய சகோதரருக்குமே 7

15

## போதை விநியோக வலையமைப்பு அரசியல்வாதிகள்மீது நடவடிக்கை

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, செப். 07

"போதைப்பொருள் விநியோக வலையமைப்பின் பின்னால் இருந்து செயல்பட்ட பிரபல அரசியல்வாதிகள் சிலருக்கு எதிராக தகுதி தராதரம் பாராது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் ", என்று பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

ஊடகசந்திப்பு ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், சில புகைப்படங்களையும் காண்பித்திருந்தார். அவற்றில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ

15

## பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்

### போதைப்பொருள் வலையமைப்பு விடயத்தில் நாமல் வலியுறுத்து

கொழும்பு, செப். 07

"சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மலின அரசியலை முன்னெடுப்பதை விடுத்து, போதைப்பொருள் வலையமைப்பு தொடர்பில் அரசாங்கம் பக்கச்சார்ப்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்", - இவ்வாறு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்திய விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன், முறையான விசாரணைகளுக்கு தமது தரப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாவுக்கு பட்டாசுடன் வந்த வாகனம் தீயில் எரிந்து நாசம்!

## வவுனியாவில் பரபரப்பு சம்பவம்



வவுனியா, செப். 07

வவுனியாவில் சப்பரத் திருவிழாவுக்கு பட்டாசுடன் வந்த வாகனம் தீயில் எரிந்து நாசமானது.

வவுனியா, வெளிக்குளம் பிள்ளையார் கோவிலின் சப்பறத் திருவிழா நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது. இந்த நிலையில், சப்பறத் திருவிழாவின் போது வெடி கொளுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட பட்டாசுகளை இறக்கிக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் திடீரென தீப்பிடித்து எரிந்தது.

இதன்போது வாகனத்தில் இருந்த பட்டாசுகளும் வெடித்தன.

சம்பவம் தொடர்பில் வவுனியா மாநகர சபை தீயணைப்புப் பிரிவினருக்கு அறிவித்ததை அடுத்து தீயணைப்புப் பிரிவினரும் ஆலயத்தில் நின்ற மக்களும் இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

எனினும், பட்டா ரக வாகனத்தின் பின்பகுதி முழுமையாக தீயில் எரிந்து நாசமானது. இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ-10)



# அரசகேசரி பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது

யாழ்ப்பாணம், செப். 07

வரலாற்று சிறப்புமிக்க நீர்வேலி சிறீ அரசகேசரி பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது.

அதிகாலை 03:00 மணிக்கு அபிஷேகம் 04.30 மணிக்கு பூசை 05 30 மணிக்கு தம்பபூசை காலை 06.30 மணிக்கு வசந்த மண்டப பூசை என்பன நடைபெற்றன.

காலை 08.30 மணிக்கு பஞ்சமுக விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர் அவர்களுக்குரிய திருத்தேர்களில் ஆரோகணித்தனர்.

6000 இற்கும் மேற்பட்ட தேங்காய்கள் அர்ப்பணிக்கப்பட்டமையைத் தொடர்ந்து காலை 10. 45 மணிக்கு தேரோட்டம் ஆரம்பமாகி மதியம் 12. 15 மணிக்கு நிறைவடைந்தது

இந்த ஆலயம் யாழ்ப்பாணம் அரச வம்சத்தைச் சேர்ந்த அரசகேசரி என்ற முதலமைச்சரால் அமைக்கப்பட்ட ஆலயம் ஆகும் (தேரில் இதற்கான வரலாறு கூறும் சிற்பங்களை வடிவமைத்துள்ளனர்)

தேர்த் திருவிழாவைக்காண அரசகேசரியும் எழுந்தருளுகிறார் என்ற ஐதீகமும் உண்டு. இதனால் அவருக்கான வரவேற்பு நிகழ்வும் நடைபெற்றது. ஆலய முன்னாள் பிரதம குரு பிரம்மசிறீ சா. சோமதேவக் குருக்கள் வரவேற்பை மேற்கொண்டார். (எ)

## எல்ல பேருந்து விபத்தில்

# உயிரிழந்தவர்களுக்கு ரூ.10 இலட்சம் இழப்பீடு

கொழும்பு, செப். 07

பதுளை மாவட்டம், எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற பேருந்து விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்காக இழப்பீடு வழங்க ஜனாதிபதி நிதியம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க ஜனாதிபதி நிதியம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் 15 பேர் உயிரிழந்த நிலையில் 18 பேர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# கோண்டாவிலில் இன்று தீ மிதிப்பு

யாழ்ப்பாணம், செப். 07

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு சிறீ மகா கணபதி பிள்ளையார் கோவிலில் (காளி கோவில்) இன்று ஞாயிற்றுக் கிழமை தீர்த்தோற்சவத்தில் தீ மிதிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கிய பெருந் திருவிழாவின் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள தீர்த்த உற்சவத்திலேயே இந்த தீ மிதிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு அபிசேகம் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு வசந்த மண்டப பூசையும் முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து தீ மிதிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த கோவிலில் தீ மிதிப்பு நிகழ்வு பன்னெடும் காலமாக நடைபெற்று வருகிறது. ஊர் மற்றும் அயல் கிராமங்களில் வாழும் அடியவர்கள் இந்தக் கோவிலுக்கு பெருந்திரளாக வந்து நேர்த்திக் கடனை நிறைவேற்றுவது குறிப்பிடத்தக்கது.

தீர்த்த உற்சவத்தின் மறுநாள் கோவிலில் நடைபெறவுள்ள இரவு பூங்காவன நிகழ்வில் விஜய் தொலைக்காட்சியின் சுப்பர் சிங்கர் பாடகர்கள் பங்கேற்கும் 'சாய்சபி' இசைக்குழுவினரின் இசை சங்கமம் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ஐ)

# தெல்லிப்பழை அணி சம்பியன்



யாழ்ப்பாணம், செப். 07

35 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் யாழ். மாவட்ட பெண்களுக்கான கயிறிழுத்தல் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச பெண்கள் அணி சம்பியனானது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சங்கானை பிரதேச பெண்கள் அணியுடன் தெல்லிப்பழை அணி மோதியது. இதில், 2 - 0 என்ற கணக்கில் வெற்றி பெற்ற தெல்லிப்பழை அணி சம்பியனானது. (எ-03)

## இலங்கை பொலிஸ் வரலாற்றில்

# நான்கு பெண் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஒரேநேரத்தில் நியமனம்



கொழும்பு, செப். 07

இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதல் முறையாக நான்கு பெண் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் (டி.ஐ.ஜி) ஒரே நேரத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதியுடன், பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய இந்தப் பதவி உயர்வுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

இதன்படி, தர்ஷிகா குமாரி, பத்மினி வீரசூரிய, ரேணுகா ஜயசுந்தர மற்றும் நிஷானி செனவிரத்ன ஆகியோர் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவியேற்கவுள்ளனர்.

இவர்களில் மூவர் 1997 ஆம் ஆண்டு பயிற்சி உப பொலிஸ் பரிசோதகர்களாக இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்தனர்.

இந்தப் பதவி உயர்வுகள் 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செயல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமிக்கப்பட்ட இந்த நான்கு பெண் பொலிஸ் அதிகாரிகளில், தர்ஷிகா குமாரி தற்போது பொலிஸ் களப் படைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

மேலும், அந்தத் தலைமையகத்தில் முதல் பெண் கட்டளை அதிகாரியாகப் பதவியேற்று சாதனை படைத்துள்ளார்.

பத்மினி வீரசூரிய தற்போது களுத்துறை மாவட்டத்துக்குப் பொறுப்பான பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக உள்ளார். இதன் மூலம், இலங்கை பொலிஸ் வரலாற்றில் ஒரு மாவட்டத்துக்கு பொறுப்பேற்ற முதல் பெண் அதிகாரி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

ரேணுகா ஜயசுந்தர, பாலியல் குற்றங்கள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்புப் பிரிவின் பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் நிஷானி செனவிரத்ன ஆராய்ச்சி மற்றும் தகவல் பிரிவின் பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நால்வரில் மூத்த அதிகாரியான நிஷானி செனவிரத்ன, அரச புலனாய்வு சேவையில் நீண்ட காலம் பணியாற்றியவர் ஆவார். (எ)

# வெற்றுக் காணியில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 07

கொக்குவில் கல்வாரி தேவாலயத்துக்கு அருகிலுள்ள வெற்றுக் காணியொன்றிலிருந்து நேற்று முன்தினம் மாலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டது.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த சிவசாமி தனபாலசுந்தரம் (வயது - 58) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (எ-03)

# 40,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான நெல் கொள்முதல்

கொழும்பு, செப். 07

அரசாங்கத்தின் நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் 40, 000 மெற்றிக்தொன்னுக்கும் அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து அதிகளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் அறுவடையில் 85 சதவீதம் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

நெல் கொள்முதல் செய்வதற்காக முதல் கட்டமாக அரசாங்கம் 60,000 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

இதில் 55, 000 மில்லியன் ரூபாய் விவசாயிகளுக்கு செலுத்தப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு இரத்து செய்யப்பட்ட பேருந்தே விபத்தில் சிக்கியது

### 15 உயிர்களை பறித்த விபத்து குறித்து தகவல்

கொழும்பு, செப். 07

எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் விபத்துக்குள்ளான பேருந்து, 2023 ஆம் ஆண்டு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் பதிவு இரத்து செய்யப்பட்டிருந்ததாக போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் பேருந்துகளை ஒழுங்குபடுத்துவதற்கு எந்தவித சட்டங்களும் இதுவரை அறிமுகப்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

குறித்த வீதியில் விபத்துகளைக் குறைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையில், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் குழு ஒன்று விபத்தில் சிக்கிய பேருந்தை ஆய்வு செய்ய அந்த இடத்துக்கு சென்றுள்ளது.

எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்ல - வெல்லவாய பிரதான வீதியில், தங்காலையிலிருந்து சுற்றுலாவுக்காக சென்ற குழுவை ஏற்றிச் சென்ற பேருந்து, வீதியின் 24ஆவது கிலோ மீற்றர் தூண் அருகே உள்ள பள்ளத் தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சஷீந்திர ராஜபக்ஷ சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதி!

கொழும்பு, செப். 07

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன வேவ பகுதியில் உள்ள அரசாங்க நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஓகஸ்ட் 06 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சஷீந்திர ராஜபக்ஷ கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சஷீந்திர ராஜபக்ஷ சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவையும் நீதிமன்றம் நிராகரித்தது.

இதேவேளை, திடீர் உடல் நலக்குறைவு காரணமாக சஷீந்திர ராஜபக்ஷ சிறைச்சாலை மருத்துவமனையில் நேற்றுக்காலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி! ஒருவர் படுகாயம்

கொழும்பு, செப். 07

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இவ்வாறு, உயிரிழந்தவர் களனியைச் சேர்ந்த 26 வயது நபர் என அடையாளம் காணப்பட்டார். துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை.

இதேவேளை, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்தை வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கிக்கு முன்பாக நேற்று அதிகாலை இடம்பெற்ற மற்றொரு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக சீன மாநாட்டை புறக்கணித்த அரசாங்கம்

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, செப். 07

பொருளாதார அபிவிருத்தி மற்றும் உலக அமைதி என்ற தொனிப்பொருளில் சீனாவில் நடைபெற்ற மாநாட்டை அரசாங்கம் புறக்கணித்துள்ளது. அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதியோ அல்லது அமைச்சர்களோ இதில் கலந்துகொள்ளவில்லை. அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையிலிருந்து அரசாங்கம் விலகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கான பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“பொருளாதார அபிவிருத்தி மற்றும் உலக அமைதி“ என்ற தொனிப்பொருளில் சீனாவில் ஓகஸ்ட் 31 - செப்ரெம்பர் முதலாம் திகதி வரை மாநாடொன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் உலகில் பலவந்த நாடுகள் பலவும் பங்கேற்றன.

அத்தோடு 10 நாடுகள் இந்த மாநாட்டில் நிரந்தர அங்கத்துவத்தையும் பெற்றுள்ளன. 2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை இந்த மாநாட்டில் பங்கேற்று வருகிறது.

ஆனால், இம்முறை இலங்கை சார்பில் எவரும் பங்கேற்கவில்லை. ஜனாதிபதிக்கு செல்ல முடியாவிட்டால், வெளிவிவகார அமைச்சர் அல்லது வேறு அமைச்சர்கள் பங்கேற்றிருக்க முடியுமல்லவா? அல்லது குறைந்தபட்சம் பீஜிங்கிலுள்ள இலங்கைத் தூதுவரையாவது பங்குமற்றுமாறு ஆலோசனை வழங்கியிருக்கலாமல்லவா? அணிசேரா வெளிநாட்டு கொள்கையிலிருந்து இவர்கள் விலகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கான பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது நாட்டுக்கு பாரிய இழப்பாகும். இதேபோன்று தான் இவர்கள் பிரிக்ஸ் மாநாட்டையும் புறக்கணித்தனர்.- என்றார். (எ)

# கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நெடுந்தீவில் கருத்தடை திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 07

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த கருத்தடைத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளதாகவும் இதற்கான பணி நெடுந்தீவில் ஆரம்பிக்கப்படும் எனவும் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஆகியன இணைந்து இந்தச் செயல்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் ஏற்கனவே ஆராயப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதன் ஓர் அங்கமாக நாய்களுக்கு கருத்தடை செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு தொடரும்.

இதன் ஆரம்ப செயல் திட்டம் நெடுந்தீவில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் நகர்ப்புறங்களில் இதற்கான செயல்திட்டத்தை முன்னெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஜனநாயக விரோத செயலை வன்மையாக கண்டிக்கிறோம்

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, செப். 07

அமைச்சர்கள் சிலர் சட்டத்தையும் அதிகாரத்தையும் கையில் எடுத்துக்கொண்டு முன்னிலை சோசலிச கட்சி செயல்பாட்டாளர்களை தாக்கிய ஜனநாயக விரோத செயலை வன்மையாக கண்டிக்கிறோம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறிப்பிட்ட காலத்திலிருந்து முன்னிலை சோசலிச கட்சியின் காரியாலயமாக முன்னெடுத்துச்செல்லப்பட்ட கம்பஹா யக்கல அலுவலகம், அதன் உறுப்பினர்களின் அரசியல் பிளவுடன் வெளிப்பட்டிருந்த இந்த காரியாலயத்தின் சட்ட ரீதியிலான உரிமை தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் மக்கள் விடுதலை முன்னணிக்குரியது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில், சட்டத்தின் உரிமையை தங்களின் கைகளில் எடுத்துக்கொண்டு பலவந்தமான அதிகாரமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால், கடந்த வாரம் குண்டர்களின் அதிகாரத்தை பயன்படுத்திக் கொண்டு, அந்த காரியாலயத்தில் தங்கிருந்த முன்னிலை சோசலிச கட்சி செயல்பாட்டாளர்களை தாக்கி, அவர்களை விரட்டியடித்து, அந்த நிலையத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் சிலர் கைப்பற்றிய முறை, முற்றாக சட்டத்துக்கு முரணானது. ஜனநாயக விரோதமாக மேலாதிக்கமாக அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளதாகவே காண்கிறோம்.

இந்த ஜனநாயக விரோத செயல்பாடை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### பிரஜாசக்தி உள்ளிட்ட அரசாங்கத்தின்

# அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி மீளாய்வு

கொழும்பு, செப். 07

சமூக வலுப்படுத்தலையும் பொருளாதார நன்மைகள் சமூகத்தில் சமமாக பகிரப்படுவதையும் உறுதி செய்வதற்காகவும் தற்போதைய அரசாங்கத்தின் முதன்மைத் திட்டமான ‘பிரஜாசக்தி’ தேசிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்தல் மற்றும் அரசாங்கத்தின் தற்போதைய முதன்மையான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த மாவட்ட அளவிலான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் மாவட்ட செயலாளர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

‘பிரஜாசக்தி’ வேலைத் திட்டம் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் விதம் மற்றும் அதன் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், ‘பிரஜாசக்தி’ வேலைத் திட்டத்தை, நாட்டின் வறுமையை ஒழிக்கும் மற்றுமொரு திட்டமாக மாற்றாமல், வளமான நாட்டை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்துடன் முழு அரசாங்க பொறிமுறையையும் ஒருங்கிணைத்து முன்னோக்கி செயல்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்து, எதிர் வரும் ஆண்டுகளில் அரசாங்கத்தின் அனைத்து மாவட்ட அளவிலான அபிவிருத்தித் திட்டங்களும் கிராமிய மட்டத்தில் சமூக அபிவிருத்தி சபைகளால் அடையாளம் காணப்படும் அபிவிருத்தித் திட்டங்களாக இருக்க வேண்டும் என்றும் எனவே, மாவட்ட அளவிலான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும்போது ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு வரம்புக்குள் பொருந்தக்கூடிய திட்டங்களை அடையாளம் காண்பதற்குப் பதிலாக, வேலைத் திட்டத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு முன்னுரிமையளிக்க வேண்டும் என்றும் அந்த முன்னுரிமைகளுக்கு ஏற்ப அந்தந்த அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகள் ஆகியவை அதன் நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்க வேண்டும் என்றும் பிரஜாசக்தி செயலகம் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவின் கருத்துகளே போர்க் குற்றச்சாட்டுக்கு காரணம்!

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, செப். 07

**வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்துகள் காரணமாகவே படையினருக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பொன்சேகா அவ்வாறு கூறியிருக்காவிட்டால், படையினருக்கு எதிரான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும் நாமல் கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தப்பிச்செல்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தம் செய்ய முன்வந்தார் என சரத் பொன்சேகா கூறியுள்ள விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நாமல் இதனைத் தெரிவித்தார்.

போரில் விடுதலைப் புலிகளால் வெள்ளைக்கொடி காட்டப்பட்டபோது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று பொன்சேகா கூறியிருந்தார்.

இந்த நிலையில் பொன்சேகா வெளிநாட்டில் ஒன்றையும் இங்கு வேறொன்றையும் கூறுவதாக நாமல் கூறினார்.

பொன்சேகா போரை முடிக்கப் பங்களிப்பு செய்தவர். அதனாலேயே அவர் மனம் நோகும்படி தாம் கருத்துகளை முன்வைப்பதில்லை என்றும்



ஆனால், பொன்சேகா தற்போது முழுநேர அரசியல்வாதி என்றும் நாமல் தெரிவித்தார். (அ-எ)

# மின்சார சபை ஊழியர்கள் போராட்டம் தொடர்கிறது!

கொழும்பு, செப். 07

இலங்கை மின்சார சபையை நான்கு பகுதிகளாகப் பிரிப்பதற்கு எதிராக மின்சார சபை ஊழியர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

எந்தவொரு ஊழியரும் தன்னார்வ இழப்பீட்டுத் திட்டத்துக்கு அனுமதிக்கவில்லை என இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்பப் பிரிவின் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்தார்.

இதற்கமைய, வேலைநிறுத்தப் போராட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி நள்ளிரவு வரை முதற் கட்டமாக அமுலில் இருக்கும்.

மின்சார சபை மறுசீரமைப்பில் தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பற்ற பணிக் கொள்கை காரணமாக வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் அமைச்சருடனும் இது குறித்து விவாதித்தேன். அங்கு எனக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்று அபேசிங்க மேலும் தெரிவித்தார். (எ)

# சுயாதீன குற்றப்பத்திர அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு விசேட குழு நியமனம்

## அரசு மீது விமல் வீரவன்ஸ சாடல்

கொழும்பு, செப். 07

நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் இறையாண்மையை பாதுகாத்த இராணுவத்தினரை சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. சுயாதீன குற்றப்பத்திர அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் ஊடாக இராணுவத்தினர் இலக்கு வைக்கப்படுவார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் வருடாந்தக் கூட்டத்தொடர் நாளை 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த பின்னணியில் அரசாங்கம் இரண்டு பிரதான அறிவிப்புக்களை விடுத்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வடக்கு மாகாணத்தில் குறிப்பிட்ட விடயங்கள் அவதானத்துக்குரியவை. இனவாதத்துக்கு இடமில்லை என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். வடக்குக்கு சென்றால் மாத்திரம் தான் இனவாதம் பற்றி ஜனாதிபதிக்கு நினைவுக்கு வரும்.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு சர்ச்சைக்குரிய தீர்மானங்களை எடுப்பதற்கும் பின்வாங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி வடக்கில் குறிப்பிட்டுள்ளார். அந்த சர்ச்சைக்குரிய தீர்மானங்கள் என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும்.

வடக்கில் இனவாதத்தை தோற்றுவிக்க தெற்கில் ஒரு தரப்பினர் செயல்படுவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இந்த நாட்டில் வடக்கில் தான் இன்றும் இனவாதம் மற்றும் இனவாத முரண்பாடுகள் காணப்படுகின்றன.

ஏனைய பகுதிகளில் இனவாத செயல்பாடுகள் ஏதும் கிடையாது. வடக்கில் திஸ்ஸ விகாரைக்கு எதிராக அங்கு உள்ள இனவாதிகள் செயல்படும் போது அவர்கள் கைது செய்யப்படவில்லை.

வடக்கில் பௌத்த மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படும் போது அதற்கு எதிராக அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை"- என்றார். (எ)

### எல்ல பேருந்து விபத்தில்

# காயமடைந்தவர்களின் உயிருக்கு ஆபத்தில்லை

பதுளை, செப். 07

எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி காயமடைந்து பதுளை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் நிலைமை தற்போது சீராகி வருவதாகவும் அவர்களில் யாருக்கும் உயிருக்கு ஆபத்தில்லை என்றும் மருத்துவர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அவர் மேலும் கூறுகையில், விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்ற தங்களை அர்ப்பணித்த அனைவரும் தங்கள் தியாகங்களால் இந்த உயிர்களைக் காப்பாற்ற முடிந்ததில் மகிழ்ச்சியடையலாம்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்ற வைத்திய குழுவினர், இராணுவம் மற்றும் எல்ல பிரதேசவாசிகள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி.

அனைத்து நோயாளிகளின் உயிருக்கும் இருந்த ஆபத்து தற்போது நீங்கியுள்ளது. அவசர அறுவைச் சிகிச்சைகள் அனைத்தும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. நோயாளிகள் தற்போது அந்தந்த விடுதிகளில் சிகிச்சை பெறுகின்றனர். குறிப்பாக, குழந்தைகளின் நிலைமை நன்றாகவுள்ளது. அவர்களின் உயிருக்கு ஆபத்து இல்லை. தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள இரண்டு நோயாளிகளுக்கும் பெரிய ஆபத்து இல்லை. இந்த உயிர்களைக் காப்பாற்ற அனைவரும் கடினமாக உழைத்தனர்.- என்றார். (எ)

# பாரவூர்தி - ஓட்டோ மோதி விபத்து!



ஹற்றன், செப். 07

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் செனன் பகுதியில் எரிபொருளை ஏற்றிச் சென்ற பாரவூர்தியும் ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 05.00 மணியளவில் இடம்பெற்றது.

இதில் ஓட்டோவில் பயணித்த சிறு குழந்தை ஒன்று படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதா? முறைமையை நீக்குவதா?

## அரசு கூறவேண்டும் கபே அமைப்பு வலியுறுத்தல்

மட்டக்களப்பு, செப். 07

கிழக்கு மாகாண சபை தேர்தல் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பிற்போடப்பட்டு வருகின்றது. எனவே, ஜனநாயகத்தை மதிப்பதாக ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் என்றால் மாகாண சபை தேர்தலை நடத்த அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது இந்த முறைமை பொருத்தம் இல்லை, இதை நீக்கப்போகின்றோம் என மக்களுக்கு அரசு கூறவேண்டும் என கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு, காத்தான்குடியில் உள்ள சுதந்திரமானதும் நீதியானதும் மக்கள் இயக்கமான கபே அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"கபே அமைப்பு 2008ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் நடத்தப்பட்ட ஒவ்வொரு தேர்தலிலும் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்துள்ளது. அதேபோல தேர்தல் அல்லாத காலத்தில் வாக்காளர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றோம்.

தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படுவது தொடர்பில் ஒவ்வொரு காலத்திலும் மிக அவதானம் செலுத்தி வருகின்றோம். இலங்கையை பொறுத்தளவில் கடந்த கால அரசியல் வரலாற்றை பார்க்கின்றபோது தேர்தல்கள் நடத்தப்படும் காலத்தை பார்த்தால் உத்தியோக பூர்வ கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் அந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் அவர்களுக்கு சாதகமான காலங்கள் வருகின்றபோது தேர்தல்களை நடத்தி உள்ளனர்.

அதேபோல உத்தியோக பூர்வ கால எல்லை முடிவடைந்தும் பதவியில் இருக்கும் அரசாங்கத்துக்கு ஒரு சாதகமான காலம் வரும் வரைக்கும் பல மாதங்கள், பல வருடங்கள் காலத்தை கடத்திவிட்டு தேர்தல்களை தொடர்ச்சியாக பிற்போட்டு வருவதை நாங்கள் அவதானித்திருக்கின்றோம்.

கிழக்கு மாகாண சபை தேர்தல் கடைசியாக 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி நடைபெற்றது. இந்த மாகாண சபையின் உத்தியோகபூர்வ கால எல்லை 2017 செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி முடிவடைந்தது. இருப்பினும், இதுவரைக்கும் ஒரு மாகாண சபைக்கான 5 வருட ஆயுட்காலம் முடிந்து 5 வருடங்கள் கடந்தும் நடத்தப்படாமல் உள்ளது."- என்றார். (எ)

# "2022 இல் ஏற்பட்ட நிலைமை 2028 இல் மீண்டும் ஏற்படும்!"

கொழும்பு, செப். 07

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை வெளிக்கொணரப்பட்டுள்ளது. எனவே, பொருளாதார வளர்ச்சி வேகத்தை பேணிச் செல்ல முடியாதுவிட்டால் 2022 இல் ஏற்பட்ட நிலைமை 2028 இல் மீண்டும் ஏற்படும் என்பதுடன் இதனால் மக்களும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.09.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இதைத்தானே கோட்டாவும் கூறினார்

பொருளாதாரப் பிரச்னைக்கான நிலையான தீர்வின் மூலமாக வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வை காண்பதில் உறுதியாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இராஜதந்திரிகளிடம் கூறியிருக்கிறார். சற்றுப் பின்னோக்கி பார்த்தால் இதைத்தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கூறியிருந்தார். வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு பிரத்தியேக பிரச்னைகள் இல்லை - அங்கிருப்பது பொருளாதார பிரச்னை மட்டும்தான்.

பொருளாதாரத்தின் ஊடாக அனைத்துப் பிரச்னைகளும் தீரும். தற்போது கோட்டாபய கூறியதை மிகவும் அவையடக்கமாக விஜித ஹேரத் கூறுகிறார். ஆனால், ஒரேயோரு வேறுபாடு கோட்டாபய போன்று அநுர குமார தன்னை ஒரு சிங்கள - பௌத்த தலைவனாக பிரகடனம் செய்யவில்லை - தொடர்ந்தும் இனவாதத்துக்கு எதிராகப் பேசிவருகிறார். ஒருவேளை கோட்டாபய ராஜபக்ஷ விடயங்களை எவ்வாறு முன்வைப்பது என்று தெரியாமல் முன்வைத்திருக்கலாம். அதிலிருந்து, ஜே. வி. பி. அதிகம் கற்றுக் கொண்டிருக்கலாம்.

வடக்கு, கிழக்கு பொருளாதார ரீதியில் மீட்சி பெறவேண்டும் என்பதில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. ஒருவேளை தமிழ் அரசியல் வாதிகளுக்கு அதில் அக்கறை இல்லாதிருந்தாலும்கூட விஜித ஹேரத் கூறுவது போன்று அரசாங்கம் அதனை செய்யவேண்டும். ஆனால், அதில் ஒரு பிரச்னை உண்டு. அடிப்படையில், அதுதான் உண்மையான அரசியல் பிரச்னையாகும். அதாவது, பொருளாதார ரீதியான முன்னேற்றங்களை திட்டமிடுவதில் தமிழ் மக்களின் பங்கு என்ன? இந்த இடத்தில் பொருளாதார அபிவிருத்தியில் மாகாண அதிகாரத்தின் பங்கு முதன்மையாகிறது. இந்த அடிப்படையில்தான் வடக்கு, கிழக்கு மாகாண அதிகாரம் முக்கியத்துவம் பெறுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்ல வேண்டுமாயின் இங்கு மாகாண ஆளுகை கட்டாயமானது. தற்போதுள்ள சூழலில் வடக்கு, கிழக்கின் மாகாண ஆளுகையின் அடிப்படையாக மாகாண சபை நிர்வாகமே இருக்கிறது. இந்த நிர்வாகத்துக்கான கதவை இறுக்கமாக மூடிக்கொண்டு வடக்கு, கிழக்கின் அபவிருத்தி தொடர்பில் சிந்திப்பது அடிப்படையிலேயே முரண்பாடானது. எனவே, அரசாங்கம் வடக்கு - கிழக்கின் பொருளாதார மேம்பாடு தொடர்பில் உண்மையிலேயே கரிசனை கொள்கிறது என்றால், முதலில் மாகாண ஆளுகைக்கான சூழலை ஏற்படுத்த வேண்டும். அதன் பின்னர் மத்தியும் மாகாணமும் இணைந்து பொருளாதார மேம்பாட்டை முன்னெடுக்க முடியும்.

கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதாரம் பற்றிப் பேசுகின்றபோது மாகாண சபைக்கு முற்றிலும் எதிர்நிலையிலேயே சிந்தித்திருந்தார். புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவருவதன் ஊடாக மாகாண சபைகளை இல்லாதொழிக்கும் திட்டம் ஒன்றே அவரிடமிருந்தது. அந்த அடிப்படையில் அவர் பயணித்தார். ஒருவேளை அவர் பதவியிவிலிருந்து அகல வேண்டிய நெருக்கடியான சூழல் ஏற்படாதிருந்திருந்தால் புதிய அரசியல் யாப்பு ஒன்றின் ஊடாக அவர் எண்ணியதை செய்தும் இருக்கலாம் - அதற்கு இந்தியா ஆடசேபனை தெரிவிக்காதிருந்தால் அதனை இலகுவாக முன்னெடுத்திருக்கலாம். அந்த அடிப்படையில்தான் மிலிந்த மொறகொட இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், கோட்டாபயவின் வெளியேற்றம் அனைத்தையும் பூச்சிய நிலைக்குக் கொண்டு சென்றது.

இவ்வாறானதொரு அரசியல் சூழலில்தான் அநுர ஆட்சியை கைப்பற்றினார். அவரது அமைச்சர் பொருளாதார பிரச்னையின் ஊடாக வடக்கு, கிழக்கில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தப் போவதாகக் கூறுகிறார் - அது எப்படி? வெறும் பொருளாதார பிரச்னையாக தமிழர் பிரச்னையை அணுகினால் கோட்டாபயவின் பார்வையும் அநுரவின் பார்வையும் ஒரு புள்ளியில்தான் சந்திக்கும். இந்த இடத்தில் தாங்கள் கோட்டாபய ராஜபக்ஷ போன்ற பார்வையுடையவர்கள் அல்லர் -மாறாக வேறுபட்டவர்கள் என்பதை அநுர குமார திஸநாயக்க எவ்வாறு நிரூபிக்கப் போகிறார்?

# ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி; பெரமுனவின் மன்னம்பேரி கைது

கொழும்பு, செப். 07

மாத்தறை - மித்தெனியவில் பொலிஸார் நடத்திய சோதனையின்போது ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 50 ஆயிரம் கிலோ இரசாயனப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து, இரசாயனப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட காணியின் உரிமையாளரான சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அங்குனுகொல பெலஸ்ஸ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான சம்பத் மன்னம்பெரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இரசாயன பொருட்கள் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஹெல்பத்தர பத்மே என்பவரால் இறக்குமதி செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கெஹெல்பத்தர பத்மே நுவரெலியாவில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து இரண்டு பாகிஸ்தானியர்களின் உதவியுடன் ஐஸ் போதைப்பொருளை தயாரித்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பெக்கோ சமன் என்று அழைக்கப்படும் சந்தேக நபரொருவரின் விசாரணையில் இருந்து பெறப்பட்ட தகவல்களைத் தொடர்ந்து, குறித்த சோதனை நடவடிக்கைகள், மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்தே முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டார்.

இதேசமயம், இந்தோனேசிய பொலிஸாரால் கெஹெல்பத்தர பத்மே, கொமாண்டோ சலிந்த, பாணந்துறை நிலங்க உள்ளிட்ட 5 பேர் கடந்த மாதம் 27ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கடந்த 31ஆம் திகதி நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாணந்துறையிலும் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, செப். 07

களுத்துறையில் நேற்று காலை விற்பனை நிலையம் ஒன்றின்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதன்போது, அந்த நிலையத்தில் பெண் ஒருவர் இருந்தபோதிலும் அவர் காயங்கள் எதுவுமின்றி தப்பினார்.

களுத்துறை - பாணந்துறை - அலுபோமுல்லை பகுதியிலேயே இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்களில் வந்த இருவரே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும் இதற்கு என் 99 ரக பிஸ்டல் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் விற்பனை நிலையத்திற்கு சேதமடைந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்பத் மன்னம்பேரி கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கம்

## சிறீ லங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, செப். 07

போதைப்பொருள் தயாரிப்புக்கான இரசாயனப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சம்பத் மன்னம்பெரியின் கட்சி உறுப்புரிமையை பறித்துள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் வெளியிட்ட அறிக்கையில்,

"இது போன்ற குற்றச்சாடடுகளை எதிர்கொள்பவர்களுக்கு தமது கட்சி ஒரு போதும் ஆதரவளிப்பதில்லை. இதன்படி, அவரின் கட்சி உறுப்பினர் பதவியை உடனடியாக இரத்து செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மிகவும் கடுமையானவை. அவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைகள் மிக விரைவில் முடிவடைந்து, உண்மை பொதுமக்களுக்கு வெளிப்படும் என்று நம்புகிறோம் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# மருதானை துப்பாக்கிச்சூடு; பெண் உட்பட இருவர் கைது

கொழும்பு, செப். 07


மருதானையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், அவரின் பெண் தோழியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - மருதானை - பஞ்சிகாவத்தை வீதியில் நேற்று அதிகாலை துப்பாக்கிச்சூடு ஒன்று இடம்பெற்றது. இதில், காயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மோட்டார் சைக்கிள் செலுத்துநரை புளுமெண்டல் பகுதியில் வைத்து தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், அந்த வேளை, சந்தேகநபருடன் பயணித்திருந்த அவரின் பெண் தோழியும் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)


# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளைப் போற்றுவோம்!

முனைவர் எஸ். பாலசுப்ரமணியன்



இன்றைய சமூகத்தில் மிகவும் முக்கியமான விவாதங்களில் ஒன்று, திருமணம் எனும் அமைப்பின் தற்காலப் பொருத்தப்பாடு குறித்ததாகும். பாரம்பரிய மதிப்பீடுகளுக்கும் நவீன சிந்தனைகளுக்கும் இடையே நிகழும் இந்த உரையாடலின் மையத்தில், இல்லறம் என்பது தனிமனித வாழ்வின் ஓர் அங்கமாக மட்டுமின்றி, சமூகத்தின் ஆணிவேராகவும் திகழ்கிறது என்ற பேருண்மை அடங்கியுள்ளது.

அண்மையில் ஒரு புதுமணத் தம்பதியருக்கான நிகழ்வில், இந்தச் சிந்தனைகளுக்கு ஒரு மிகச் சிறந்த தொடக்கத்தை வழங்கியது. அங்கே, கணவர் தன் மனைவிக்கு ஒரு மலரை வழங்கி, 'இந்த மலரின் மென்மை குணம் கொண்டவளே, நீ என் வாழ்வில் இணைந்தது நான் பெற்ற பேறு. உன்னை என் வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பேன்" என்றார். அவரது வார்த்தைகளில் அப்பட்டமான நேர்மையும், ஆழ்ந்த அன்பும் வெளிப்பட்டன.

அதற்குப் பதிலாக, அந்தப் பெண்மணி தன் கணவருக்கு ஒரு கனியை அளித்து, 'கனியைப் போன்ற கனிவான மனம் கொண்டவரே, என்னை இந்தக் குடும்பத்தில் ஏற்று, என் தனித்துவத்தை மலரச் செய்து, சுவைமிக்க ஒரு வாழ்க்கையை வழங்கியிருக்கிறீர்கள். இந்தக் கனியின் வித்து, செடியாகி, பூத்து, காய்த்து, மீண்டும் கனிவது போல், நம் உறவும் தழைக்கட்டும்" என்று நன்றியுரைத்தார். வெறும் சடங்காக அல்லாமல், ஓர் ஆழமான மன இணைப்பின் தொடக்கமாக அந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இத்தகைய நிகழ்வுகள், தம்பதியரிடையே பிணைப்பை வலுப்படுத்துவதோடு, குடும்பம் எனும் அமைப்பின் சமூகப் பங்களிப்பையும் நமக்கு நினைவூட்டுகின்றன. இந்த அன்பும், உறுதியும் பல்லாயிரம் ஆண்டுகளாகவே தமிழர்களின் வாழ்வியலில் ஊறிப்போயிருக்கிறது.

நமது பன்முகப் பண்பாட்டில், திருமணங்கள் இரு குடும்பங்களையும் சமூகத்தையும் ஒன்றிணைக்கும் பெருவிழாவாகவே கொண்டாடப்படுகின்றன.

இன்றைய தலைமுறை சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் தனிநபர் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையே ஓர் உறவில் அதிகம் எதிர்பார்க்கிறது.

ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியத்தின் தரவுகளின்படி, 2011-2021-ஆம் ஆண்டுகளுக்கு இடையில் திருமணமாகாத பெண்களின் எண்ணிக்கை 13.5 வீதத்திலிருந்து 19.9 வீதமாக உயர்ந்திருப்பது, இந்தச் சிந்தனை மாற்றத்தின் தெளிவான பிரதிபலிப்பு. இந்த மாற்றம், துணை என்ற கருத்துக்கோ, அன்புக்கோ எதிரானது அல்ல. மாறாக சமத்துவமும், மன இணைவும் கொண்ட ஓர் உறவை நோக்கிய தேடலின் வெளிப்பாடே ஆகும்.

இந்த மாற்றத்தின் மையத்தில் இருப்பது 'தன்முனைப்பு' (ஈகோ) அல்ல. 'தன்னிலை உணர்தல்' (செல்ப் ரியலைசேஷன்) என்ற ஆழமான தேடல்தான். 'கணவர் இப்படித்தான் இருக்க வேண்டும்', 'மனைவி இப்படித்தான் நடக்க வேண்டும்' என்று சமூகம் நமக்குள் விதைத்திருக்கும் சுயபிம்பங்களை ('நான்" என்ற எண்ணத்தை) நாம் பரந்த பார்வையுடன் கேள்விக்குட்படுத்தும்போது, அங்கே 'நான்' என்பது விலகி 'நாம்" என்பது விடையாகக் கிடைக்கிறது. ஆனால், தனது அடையாளத்தையே இழந்துவிடுவோமோ என்ற அச்சத்தில், மனம் இந்த மாற்றத்தை ஏற்கத் தயங்குகிறது.

உலக சராசரியுடன் ஒப்பிடுகையில் நமது நாட்டில் விவாகரத்து விகிதம் குறைவாக இருப்பினும், அண்மைக் காலங்களில் நீதிமன்றங்களில் பதியப்படும் குடும்பநல வழக்குகள் அதிகரித்துள்ளன. இது, உறவுகளில் நிலவும் எதிர்பார்ப்புகளுக்கும் எதார்த்தத்துக்கும் இடையேயான இடைவெளியைச் சுட்டுகிறது. வரனின் சொத்து மதிப்புக்கும், வருமானத்துக்கும் அளிக்கப்படும் முக்கியத்துவம், திருமணத்தை ஒரு வணிக ஒப்பந்தமாகச் சுருக்கும் அபாயமும் உள்ளது.

மேலும், பொருளாதார அழுத்தங்கள், விண்ணை முட்டும் வாடகை, விலைவாசி உயர்வு போன்றவை இளையோர்களின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதன் விளைவாக, சிலர் திருமணத்துக்கு மாற்றாக இணைந்து வாழும் உறவுகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இத்தகைய உறவுகளில் பரஸ்பர நேர்மையும், தெளிவான நோக்கங்களும் இருக்குமா என்று கேள்வி எழுகிறது. ஒருவரின் உணர்வும் மற்றவரின் தேவையும் வேறுபடும்போது, அது ஏமாற்றத்தில் முடிய வாய்ப்புள்ளது.

ஒரு செம்மையான இல்லறத்தைக் கட்டமைக்க, 'நான்' என்ற சுயபிம்பத்தைக் கடந்து, 'நாம்' என்ற புரிதலுக்கு இரு துணைகளும் வரவேண்டும். அந்தப் புரிதலின் அடிப்படையில் இல்லறத்தைக் கட்டமைக்கும்போது, பல அம்சங்கள் இயல்பாகவே மலரும். எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்தாலும், வலுவான குடும்ப அமைப்பேசமூகத்தின் உயிர்நாடியாகத் திகழ்கிறது.

எனவே, பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் எதிரெதிர் துருவங்களாகப் பார்க்காமல், இரண்டின் சிறந்த கூறுகளையும் இணைக்கும் ஒரு புதிய பாலத்தையே நாம் உருவாக்க வேண்டும். இந்தப் புரிதலுக்குச் சிறந்த வழிகாட்டியாக, வேதாத்ரி மகரிஷியின் தத்துவம் அமைகிறது. அவர், இல்லறத்தை வெறும் உறவாகப் பார்க்காமல், 'இரு உயிர்கள் இணைந்து செய்யும் தவ வாழ்வு' என்று குறிப்பிடுகிறார். இது, கணவன்-மனைவி இருவரும் தனித்தனியான விருப்பு-வெறுப்புகளைக் கடந்து, ஒருவருக்கொருவர் துணையாக இருந்து, தங்கள் வாழ்வில் மட்டுமல்லாமல், சமூகத்தின் உயர்வுக்கும் பாடுபட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

திருமண பந்தத்தின் உண்மையான வெற்றி, தனிநபர் சாதனைகளில் இல்லை. அது ஓர் உன்னதமான கூட்டுப் பயணத்தின் அழகியலில் இருக்கிறது என்பதை உணர்வதே இன்றைய காலத்தின் தேவை.

(தினமணி)

## இந்தவார ராசிபலன் 07.09.2025 - 13.09.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 22
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பௌர்ணமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் செல்வம் சேரும். உங்கள் அன்பு உறவுகளின் ஆசைகளை நிறைவேற்றும் காலம் இது. எனவே அவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். வழக்கமாக செய்யும் காரியங்கள் வழக்கத்திற்கு மாறாக மாறுபடும் போது மாற்றி யோசித்தால் ஆதாயம் பெருகும். திருமணம் ஆகாதவர்களுக்கு அழகிய மனைவி அமைவாள். தாமதப்படலாம். மகிழ்ச்சியான மண வாழ்க்கை அமையும். மனைவியின் பக்தி மார்க்கம் உங்கள் மத உணர்வைத் தூண்டும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். அரசுப் பணியில் தங்கள் திறமைமிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஆலய தரிசனம் மனநிறைவைத் தரும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய சுற்றுலாப் பயணங்களின் மூலம் இன்புறுவீர்கள். நண்பர்க ளால் பல நன்மைகள் ஏற்படும். வட்டிக்கு ஆசைப்பட்டு வங்கி தவிர பாது காப்பற்ற வேறு பொருளாதாரத் திட்டங்களில் சேமிக்காமல் எச்சரிக்கை யுடன் இருந்தால் இழப்பைத் தவிர்க்கலாம். இடைவிடாத வேலை பளு காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். பழைய கடன்கள் சுலபமாக வசூலாகும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய்வழி உறவுகள் உதவி செய்வார்கள். தொலை தூரப்பயணங்களால் எதிர்பார்த்த நன்மைகள் ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். அரசு அதிகாரிகளால் சிலருக்குத் இடையூறுகள் ஏற்படலாம். வீண் அலைச்சல்கள் ஏற்படும். குழந்தைகள் மூலம் தொல்லை மற்றும் அவமானங்கள் ஏற்படலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்கு சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சுறுசுறுப்பாக பணிகளை ஆற்றி நல்ல பெயர் எடுப்பீர்கள். புனித யாத்திரைகளின் மூலம் இன்பம் அதிகரிக்கும். இளைஞர்கள் புதிய வேலைவாய்ப்புக்காக பல இடங்களுக்கு அலைந்து திரிய நேரிடும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலமாக இருக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். ஆதாயம் அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். உற்பத்தி திறன் குறையும் வாய்ப்பு ஏற்படலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக் கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கி யம் ஏற்படும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுஜன தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் செய்தியொன்றைக் கூறவா ஜனாதிபதி அநுர கச்சதீவுக்கு விஜயம் செய்தார்?

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தகராறுக்குரிய ஒரு பிராந்தியமாக கச்சதீவு இருந்திருந்தால் கடந்த வாரம் ( செப்டெம்பர் 1) ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தரிசு நிலமாகக் கிடக்கும் அந்த தீவுக்கு மேற்கொண்ட முன்கூட்டியே அறிவிக்கப்படாத விஜயம் சர்ச்சை தோன்றுவதற்கு காரணமாக இருந்திருக்க முடியும். என்றாலும் கூட, இலங்கைக்கு சொந்தமான நிலப்பரப்புக்கு அதன் ஜனாதிபதி செய்த விஜயம் அரசியல் மற்றும் இராஜதந்திர உரையாடல்களில் ஒரு மையப்பொருளாக கச்சதீவை மாற்றியிருக்கிறது.

இந்திய அரசாங்கம் திசநாயக்கவின் கச்சதீவு விஜயம் குறித்து இதுவரையில் எந்தவிதமான பிரதிபலிப்பையும் வெளிக்காட்டவில்லை. ஆனால், இந்திய அரசியல் அரங்கிலும் ஊடகப்பரப்பிலும் பெருமளவில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. அந்த விஜயத்தின் மூலமாக இலங்கை ஜனாதிபதி எத்தகைய செய்தியை, யாருக்கு கூறுவதற்கு முயன்றார் என்ற கேள்வியைச் சுற்றியவையாகவே அந்த விமர்சனங்கள் அமைந்திருக்கின்றன.

இந்தியாவின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரும் அரசியல் அவதானியுமான நிருபமா சுப்பிரமணியன் 'இலங்கையின் ஒரு தீவிடமிருந்து சமிக்கை' என்ற தலைப்பில் கடந்த வாரம் எழுதிய கட்டுரையில் 'சீனாவில் ஜனாதிபதிகள் சி ஜின்பிங்குடனும் விளாடிமிர் புட்டினுடனும் கமராக்களுக்கு முன்னால் நின்று பிரதமர் நரேந்திர மோடி தோழமை பாராட்டியபோது இந்தியா வடக்கு நோக்கி கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த அதே வேளை, இந்தியாவின் தென்திசை அயல்நாடு புதுடில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் சந்தடியின்றி ஒரு செய்தியை அனுப்பியிருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிகுந்த நல்லுறவு நிலவுகின்ற ஒரு நேரத்தில் அதுவும் கச்சதீவு தொடர்பில் புதுடில்லி எந்தப் பிரச்சினையையும் கிளப்பியிராத வேளையில் புதுடில்லிக்கு ஒரு செய்தியை அனுப்ப வேண்டிய தேவை ஜனாதிபதி திசநாயக்கவுக்கு இருந்திருக்கும் என்று நம்பமுடியவில்லை.

ஆனால், தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டில் இன்னமும் ஆறு மாதங்களில் சட்டசபை தேர்தல்கள் நடைபெறவிருக்கும் பின்புலத்தில் மாநில அரசியல்வாதிகள் கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் முனைப்புடன் முன்வைக்கத் தொடங்கியிருப்பதால் அவர்களுக்கு ஒரு செய்தியைக் கூறுவதற்காக திசநாயக்க கச்சதீவுக்கு விஜயம் செய்தார் என்ற ஒரு கருத்து இருக்கிறது.

கச்சதீவுக்கு செல்வதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றிய திசநாயக்க அந்த தீவு இலங்கை மக்களுக்குச் சொந்தமானது என்றும் பலவந்தமாக அதை எம்மிடமிருந்து பறிக்க எவரையும் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறினார்.

எது எவ்வாறிருந்தாலும், திசநாயக்கவின் கச்சதீவு விஜயம் அடையாளபூர்வமான கனதியொன்றைக் கொண்டிருக்கிறது. இந்தியாவுடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டதன் மூலம் கச்சதீவை இலங்கைக்கு சொந்தமாக்கிய முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கூட கச்சதீவை பார்வையிட வேண்டும் என்று அக்கறை காட்டவில்லை. அவருக்கு பிறகு பதவிக்கு வந்த எந்தவொரு பிரதமரோ அல்லது ஜனாதிபதியோ கச்சதீவுக்கு விஜயம் செய்ததில்லை. இந்தியாவுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகத்தான் அவ்வாறு அவர்கள் செய்தார்களோ தெரியவில்லை. அந்த தீவில் காலடி வைத்த முதல் இலங்கை அரச தலைவராக ஜனாதிபதி திசநாயக்க வரலாற்றுப் பதிவுக்கு உரியவராகியிருக்கிறார்.


அவரின் அந்த விஜயம் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்ட ஜனாதிபதி ஊடகப்பிரிவு 'யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியான பல அங்குரார்ப்பண நிகழ்வுகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களில் இன்று (01) பங்கேற்றதை தொடர்ந்து ஜனாதிபதி அநுரா குமார திசநாயக்க கச்சதீவுக்கு ஒரு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார். கடற்தொழில், நீரியல்வள மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, வடபகுதி கடற்படைத் தளபதி றியர் அட்மிறல் புத்திக்க லியனகமகே ஆகியோரும் ஜனாதிபதியுடன் அந்த விஜயத்தில் இணைந்து கொண்டனர்" என்று மாத்திரம் குறிப்பிட்டது.

பாக்குநீரிணையில் தமிழ்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் வடபகுதி மீனவர்களுக்கு தனது ஒருமைப்பாட்டை வெளிக்காட்டும் ஒரு 'துணிச்சலான சமிக்கையாக' ஜனாதிபதி கச்சதீவுக்கு சென்றிருக்கக்கூடும் என்று இன்னொரு அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால், வடபகுதி மீனவர்கள் தங்களது கரையோரங்களுக்கு தமிழ்நாட்டு மீனவர்கள் நெருக்கமாக வந்து ஆட்சேபத்துக்குரிய முறைகளில் கடல் வளங்களைச் சூறையாடுவது குறித்து கவைலப்படுகிறார்களே தவிர, கச்சதீவைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இருப்பதாக கூறமுடியாது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கூறுவது போன்று கச்சதீவை மீண்டும் இந்தியா தனதாக்கிக் கொள்வதன் மூலம் மாநில மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணமுடியும் என்றால், யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரங்களுக்கு மாத்திரமல்ல, கிழக்கிலங்கை கரையோரத்துக்கும் நெருக்கமாக இந்திய மீனவர்கள் எதற்காக வருகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.



**ஜனாதிபதி திசநாயக்கவின் கச்சதீவு விஜயம் மீண்டும் இலங்கை கடற்படையின் தாக்குதல்கள் தீவிரமடையக்கூடும் என்ற அச்சத்தை தமிழ்நாட்டின் இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகபட்டினம் மாவட்டங்களின் மீனவர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருப்பதாக சில இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.**



இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்து நிருபமா சுப்பிரமணியன் தனது கட்டுரையில் முன்வைத்திருக்கும் கருத்து மிகுந்த கவனத்துக்குரியது.

'இழுவைப்படகுகள் போன்ற நீண்டகாலத்துக்கு பயன்படுத்த முடியாத மீன்பிடி முறைகளை தமிழ்நாடு மீனவர்கள் கடைப்பிடித்து வந்ததால், பாக்குநீரிணையின் இந்தியப் பக்கத்தில் இருந்த கடல் வளங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரின் போது கண்டிப்பான பாதுகாப்புக் கட்டுப்பாடுகளின் விளைவாக யாழ்ப்பாண மீனவர்கள் கடலுக்கு செல்லாத காரணத்தால் பெருமளவு வளங்களை கொண்டதாக இருந்த பாக்குநீரிணையின் இலங்கைப் பக்கம் இந்திய மீனவர்களை கவர்ந்திழுக்கிறது.

'அனேகமாக தினமும் இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் செய்கின்ற ஊடுருவல்கள் அவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதிலும் படகுகளையும் வலைகளையும் பறிமுதல் செய்வதிலும் வந்து முடிகிறது. ஆனால், மாற்று வாழ்வாதாரங்களை உருவாக்குவதில் அல்லது மீன்பிடித்துறையை பல்வகைப்படுத்துவதில் உள்ள பிரதான சவால்களை கையாளுவதற்கு பதிலாக, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தலைவர்கள் மீனவர்களின் சகல பிரச்சினைகளுக்கும் கச்சதீவே பதில் என்ற மாயையை ஊக்குவிக்கிறார்கள்.' என்று அவர் எழுதியிருக்கிறார்.

கச்சதீவை இந்தியா மீண்டும் சொந்தமாக்க வேண்டும் என்று இரு பிரதான திராவிட இயக்கக் கட்சிகளின் அரசாங்கங்கள் இதுவரையில் நான்கு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கின்றன. கச்சதீவு தொடர்பில் இலங்கையுடன் இந்தியா செய்த உடன்படிக்கைக்கு எதிராக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் தற்போது அந்த வழக்கை தொடர்ந்து முன்னெடுக்கிறது. மீண்டும் வழக்கு விசாரணை செப்டெம்பர் 15 ஆம் திகதி தொடங்குகிறது.



வீரகத்தி தனபாலசிங்கம்

இத்தகைய பின்புலத்தில் சினிமா நடிகரும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் ஆகஸ்ட் 21 ஆம் திகதி மதுரையில் தனது கட்சியின் மகாநாட்டில் கச்சதீவு பிரச்சினையை கிளப்பி அந்த தீவை இலங்கையிடம் இருந்து மீட்டெடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

'இலங்கை கடற்படையின் தாக்குதல்களினால் இதுவரையில் சுமார் 800 தமிழ்நாட்டு மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதைக் கண்டிப்பதற்கு பெரிதாக எதையும் செய்யுமாறு நான் பிரதமர் மோடியைக் கேட்கவில்லை. மிகவும் சிறிய ஒரு விடயத்தை செய்யுமாறு தான் கேட்கிறேன். எமது மீனவர்களின் பாதுகாப்புக்காக இப்போதாவது கச்சதீவை இலங்கையிடமிருந்து பிரதமர் மீட்டெடுக்க வேண்டும்' என்று விஜய் கூறினார்.

இது தொடர்பாக கொழும்பில் செய்தியாளர்கள் மகாநாட்டில் கருத்து தெரிவித்த வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் 'தேர்தல்காலப் பேச்சு" என்று அதை அலட்சியம் செய்தார். 'தென்னிந்தியாவில் தேர்தல்கள் நடத்தப்படவிருக்கின்றன. வாக்குகளை பெறுவதற்காக தேர்தல் மேடைகளில் அரசியல்வாதிகள் பல்வேறு விடயங்களைக் கூறுவார்கள். இது முதற்தடவை அல்ல. முன்னரும் கூட கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கவேண்டும் என்ற கோரிக்கைகள் தேர்தல் பிரசாரங்களின்போது முன்வைக்கப்பட்டன' என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி திசநாயக்கவின் கச்சதீவு விஜயத்துக்கு பிறகு கடந்த வியாழக்கிழமை (4) அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய அரசாங்க பேச்சாளரான சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ, தென்னிந்திய அரசியல்வாதிகளுக்காக ஜனாதிபதி கச்சதீவுக்கு செல்லவில்லை என்றும் இலங்கைக்கு சொந்தமான அந்த தீவு குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரை மக்களின் உணர்ச்சிகளை கிளறக்கூடிய கோரிக்கைகளை சிறிய உதிரிக்கட்சிகள் மாத்திரமல்ல, பெரிய கட்சிகளும் கூட தேர்தல் காலங்களில் முன்வைக்கத் தவறுவதில்லை. இலங்கை தமிழர் பிரச்சினை மற்றும் தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினை போன்றவை அவற்றில் முக்கியமானவையாக இருக்கும். தேர்தல்கள் முடிவடைந்ததும் அந்த கோரிக்கைகளின் உக்கிரம் தணிந்து விடுவதும் வழமை.

கடந்த வருடம் புதிதாக கட்சியை தொடங்கி அரசியலில் குதித்திருக்கும் நடிகர் விஜய் மற்றைய அரசியல்வாதிகளை விடவும் முற்றிலும் வேறுபட்டவராக தன்னைக் காட்டிக் கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது. கச்சதீவை மீட்பது நடைமுறைச் சாத்தியற்றது என்பதை நன்றாக தெரிந்திருந்தும் கூட மீனவர் சமூகத்தின் வாக்குகளுக்காக அந்த பிரச்சினையை தொடர்ந்து தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கிளப்பிக் கொண்டேயிருப்பார்கள்.

திராவிட இயக்கத்துக்கு எதிரான தீவிரமான தமிழ்த் தேசியவாதியாக தன்னைக் காட்டிக் கொள்ளும் நாம் தமிழர் கட்சியின் தலைவரான சீமான் தான்தோன்றித்தனமான தனது வழமையான பாணியில் கச்சதீவை இந்தியாவிடமிருந்து மீட்காவிட்டால் தமிழ்நாடு மாநிலம் இந்தியாவில் இருந்து பிரிந்துசெல்ல நேரிடும் என்று கடந்த வாரம் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். விஜயின் அரசியல் பிரவேசத்தால் தனது கட்சியின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு தொடர்பான வாக்குறுதிகளை வாக்காளர்கள் பல தசாப்தங்களாக கேட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தேர்தலுடனும் வந்த இந்த வாக்குறுதிகள் பெரும்பாலும் ஏமாற்றத்துடன் முடிந்துவிட்டன. விசாரணைகள் தடுமாறி ஆணைக்குழுக்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன. ஊழலையும் தண்டனையின்மையையும் முடிவுக்கு கொண்டு வருவதாக வாக்குறுதி வழங்கிய அதே தலைவர்களே அந்த ஊழலைச் செய்தவர்களின் அணியில் இணைந்து கொண்டதை நாம் கண்டிருக்கிறோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் வாக்குறுதிகளையும் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதில் உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகிறது. அரசாங்க வளங்களை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது இதை உணர்த்தி நிற்கிறது.

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் அரசாங்கம் ஐக்கியப்பட்டுச் செயற்படவில்லை என்று சமூக ஊடகங்களில் ஒரு பிரிவினராலும் அரசியல் கலந்துரையாடல்களிலும் ஆணைக்குழுவின் அறிக்கைகள் சாட்சிகளின் மனங்களில் சான்றுகள் மங்காமல் இருந்த வேளையில் மூன்று - நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தரவுகளைக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கும் ஊழலுக்கும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு முன்னைய அரசாங்கங்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் ஒருபோதுமே வெற்றி பெறவில்லை. பெரும்பாலும் விசாரணைகள் நீண்டகாலத்துக்கு இழுபட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்களினால் தப்பிச் செல்லக்கூடியதாக இருந்தது. ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் மக்களின் ஆணையை வென்ற முன்னைய அரசாங்கங்கள் தொடக்கத்தில் இருந்து அல்லது இடைநடுவில் இருந்து தடுமாறி இறுதியில், முடிவுக்கு கொண்டுவருவதாக உறுதியளித்த அதே தவறுகளை செய்ததையே காணக்கூடியதாக இருந்தது.

மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளுடன் தொடங்கி, விட்டுக்கொடுப்புகள் மற்றும் ஊழலுக்கு மத்தியில் பல



**கலாநிதி ஜெகான் பெரேரா**

புகளை நேர்மறையான முறையில் அங்கீகரிக்கும் ஒரு செயற்பாடாக அவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இனிமேலும் அரசாங்க அமைப்புக்களே தனியாக கையாளுகின்றவையாக மாத்திரம் இல்லாமல், நீண்டகாலமாக நீதிக்காக போராடிவருபவர்களிடம் இருந்து நியாயப்பாட்டை பெறுகின்ற - சகல தரப்புகளையும் அரவணைத்து முன்னெடுக்கப்பட வேண்டியவை என்பதை இது காட்டுகிறது.

# நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமான திருப்புமுனை!

முன்வைக்கப்படுகின்ற எண்ணத்தை அரசாங்கத்தின் சிறந்த தொடர்பாடல்காரரான ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க மறுதலித்திருக்கிறார். அரசியல் விளைவுகளை பொருட்படுத்தாமல் அரசாங்கம் குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும் என்பதை அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி கைது செய்யப்பட்டது தொடர்பாக கருத்து தெரிவித்த ஜனாதிபதி திசநாயக்க, 'இந்த வழக்கு அரசியல் ரீதியான நோக்கம் கொண்டதல்ல. எமது கடமையில் இருந்து நாம் பின்வாங்கப் போவதில்லை. பொது வளங்களை துஷ்பிரயோகம் செய்தவர்கள் எவராக இருந்தாலும் விளைவுகளுக்கு முகங்கொடுப்பார்கள்' என்று குறிப்பிட்டார். அவரின் இந்த கூற்று முன்னைய பல அரசாங்கங்கள் கடந்து செல்வதற்கு பின்வாங்கிய ஒரு கோட்டைக் வரைந்திருக்கிறது.

இதற்கு மேலதிகமாக, ஆயிரக்கணக்கானோர் காணாமல்போவதற்கு வழிவகுத்த மனித உரிமைமீறல்கள் தொடர்பில் பொறுப்பைக் கூறலை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போவதாவும் இப்போது அரசாங்கம் கூறுகிறது. காணாமல் போனோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு காணாமல் போனோர் விவகார அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய சபை முதல்வரும் அமைச்சருமான பிமால் இரத்நாயக்க அந்த மனித உரிமைமீறல்களை எல்லாம் ஆளும் கட்சி அனுபவித்திருக்கிறது என்று கூறினார்.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.), விடுதலை புலிகள் இயக்கம் மற்றும் அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கும் சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுடன் எந்த தொடர்புமில்லாத அப்பாவி மக்களுக்கும் அரசாங்கம் நீதியை வழங்கும் என்று அந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு இரத்நாயக்க உறுதியளித்தார். இந்த மீறல்களின் ஊடாக வாழ்வது எவ்வாறான வேதனைமிகு அனுபவமாக இருக்கும் என்பது எமக்கு தெரியும். உண்மைக்காகவும் நீதிக்காகவும் இன்னமும் காத்துக்கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை நாம் மறந்துவிடமாட்டோம். எவ்வளவு காலம்தான் எடுத்தாலும், இந்த விவகாரத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்" என்று அவர் சொன்னார்.

அதே நிகழ்வில் பேசிய நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, காணாமல் போனோர் விவகார அலுவலகத்தின் செயற்பாட்டு வீச்செல்லையை விரிவுபடுத்தவும் பலப்படுத்தவும் அரசாங்கம் கொண்டிருக்கும் திட்டங்களை விளக்கிக் கூறினார். 2000 ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் காணாமல்போனோரின் விபரங்களை ஆவணப்படுத்தும் செயன்முறை நிறைவு செய்யப்படாத நிலையில், காணாமல் போனோர் விவகார அலுவலகம் 2000 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் காணாமல் போனவர்களில் குறைந்தபட்சம் பத்தாயிரம் பேரின் விபரங்களையாவது ஆவணப்படுத்தும் என்று அவர் கூறினார். 'காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மிகவும் நீணடகாலமாக காத்திருக்கின்றன. வலிந்து காணாமலாக்கப்பட்டதனால் இழக்கப்பட்ட எந்த உயிரும் வரலாற்றில் இருந்து அழித்து விடப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக 2000 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் காணாமல்போனோரில் குறைந்தபட்சம் பத்தாயிரம் பேரின் விபரங்களையாவது காணாமல்போனோர் விவகார அலுவலகம் ஆவணப்படுத்தும்' என்று நாணயக்கார கூறினார்.

அவ்வாறு செய்யும்போது இந்த விவகாரத்தில் ஏற்கெனவே விசாரணைகளை மேற்கொண்ட பல்வேறு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் இருந்து அந்தப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும். இறுதியாக நியமிக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழு 2024 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த அறிக்கை முன்னைய அறிக்கைகளை சுருக்கமாக விதப்புரைகளுடன் தந்திருக்கிறது. முன்னைய



**பொறுப்புக்கூற வைக்கப்படுவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதற்கு ஒரு தந்திரோபாயமாக சகல தரப்புகளையும் அரவணைத்துச் செயற்படும் அணுகுமுறை முக்கியமாகிறது. அத்துடன் சிவில் சமூக அமைப்புக்கள், மிதவாதப் போக்குடைய எதிர்க்கட்சிகள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களினதும் பங்கேற்பும் முக்கியமாகிறது.**

மிழந்து போன 2015 ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் ஒரு எச்சரிக்கையாக விளங்குகின்றன. ஆனால், முன்னாள் ஜனாதிபதியின் கைது அடுத்ததாக தாங்கள் கைது செய்யப்படக்கூடும் என்று அஞ்சுகிறவர்களை ஐக்கியப்படுத்தியிருக்கிறது. தங்களது முன்னைய தலைவர்கள் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டதை கண்ட பழக்கமில்லாத பொதுமக்களில் ஒரு பிரிவினரும் கொந்தளித்தனர்.

ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றின் ஆழமாக வேரூன்றிய தன்மையின் விளைவாக பொறுப்புக்கூறலுக்கான எதிர்ப்பு சகல மட்டங்களில் இருந்தும் சகல துறைகளில் இருந்தும் மிகவும் வலுவானதாக வெளிக்கிளம்பும். அதனால், அரசாங்கம் மிகவும் தந்திரோபாயத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதுடன் கையாளக்கூடியதற்கு மேலாக விடயங்களை கையிலெடுக்காமல் இருப்பதும் அவசியமாகும். மத்திய வங்கி பிணைமுறி ஊல் உட்பட 400க்கும் அதிகமான வழக்குகள் ஏற்கெனவே மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருப்பதுடன் தவறாக பயன்படுத்தப்பட்ட அரச சொத்துக்களை முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தலைவர்களிடம் இருந்து மீளப்பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஊழல் மற்றும் குற்ற விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் அணுகுமுறை அவற்றைச் செய்தவர்களின் அந்தஸ்தை பொருட்படுத்தாமல் அவர்களை நீதியின் முன் நிறுத்துவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகிறது. குற்றச்செயல்களின் சூத்திரதாரிகள் என்று கூறப்படுவோர் இந்தோனேசியாவில் வைத்து அண்மையில் கைதுசெய்யப்பட்டு அந்த நாட்டு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருப்பது மேலும் பொதுவில் கிடைக்கக்கூடிய சர்வதேச ஒருங்கிணைப்பின் அறிகுறியாகும்.

சர்வதேச சமூகத்தினதும் சிவில் சமூகத்தினதும் பங்கேற்பு காணாமல் போனோர் விவகார அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின் பெரிதும் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். பொறுப்புக்கூறல் விவகாரத்தில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் வழங்கும் பங்களிப்

சிவில் சமூகம் மற்றும் சர்வதேசத்தின் ஆதரவுக்கு மேலதிகமாக, இனப்பிரச்சினையுடனும் உள்நாட்டுப் போருடனும் தொடர்புடைய பிரச்சினையைக் கையாளுவதில் நீண்டகாலத்துக்கு நிலைபேறாத தன்மையை உறுதிசெய்வதற்கு அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவும் தேவைப்படும்.

ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தண்டனையின்மை ஆகியவற்றின் விளைவான சவால்களை வெற்றிகொள்வதில் எதிர்க்கட்சிகளுக்குள் இருக்கக்கூடிய- இரு தரப்பு கருத்தொருமிப்பு அணுகுமுறையில் அக்கறை கொண்டவர்களின் ஆதரவை பெறுவது குறித்து அரசாங்கம் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். இதில் தமிழ், முஸ்லிம் கட்சிகளும் அடங்கும். இரு தரப்புக் கருத்தொருமிப்பின் அடிப்படையிலான சில நடவடிக்கைகள் இல்லாவிட்டால், பொறுப்புக்கூறல் மற்றும் சீர்திருத்த முயற்சிகள் (குறிப்பாக இனப்பிரச்சினையுடன் தொடர்புடையவை) எதிர்காலத்தில் பக்கச்சார்புக் கட்சி அரசியலில் சிக்கிவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது.

கடந்த வாரம் பல்வேறு சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் அரசபயங்கரவாதம் மீண்டும் கிளம்பாமல் இருப்பதற்கு பெருமளவுக்கு இரக்கமுடைய, பெருந்தன்மையுடைய சமுதாயம் ஒன்றின் அவசியம் குறித்து பேசினார்.

கடந்த மாதம் அமைச்சரவை நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பில் புதிய தேசியக் கொள்கை ஒன்றையும் செயற்திட்டத்தையும் வகுப்பதற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறது. இது வெறுமனே நோக்கத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு அறிக்கையாக இல்லாமல் நீதியை வழங்குகின்ற, மொழி மற்றும் மத உரிமைகளை உத்தரவாதம் செய்கின்ற, அரசாங்க சேவையில் நேர்மையான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்கின்ற, அபிவிருத்தில் சமத்துவத்தை நிலைநாட்டுகின்ற ஒரு கெட்டியான திட்டமாக இருக்க வேண்டும்.

நம்பகத்தன்மை கொண்ட ஒரு திட்டம், உறுதியளிக்கப்பட்ட சுயாதீனமான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதற்கும் போர்க்காலத்தின் பிரத்தியேகமான வழக்குகளையும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களையும் விசாரணை செய்வதற்கான வழக்குத் தொடுநர் அலுவலகத்தை உருவாக்குவதற்கும் வடக்கு, கிழக்கில் குடிமக்கள் வாழ்வில் இராணுவத்தின் ஈடுபாட்டை குறைப்பதற்கும் தெளிவான காலக்கெடுவைக் கொண்டிருக்க வேண்டும்.

தற்போது மாற்றத்துக்கான மெய்யான சாத்தியம் இருக்கிறது. நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட ஊழல் வழக்குகள் மீணடும் விசாரணைக்கு எடுக்கப்படுவதும் முன்னாள் ஜனாதிபதியின் கைதும் காணாமல் போனோர் விவகார அலுவலகம் ஏற்பாடு செய்த நிகழ்வில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளும் மாற்றம் சாத்தியம் என்ற நம்பிக்கைக்கு காரணமாகின்றன. வசதிவாய்ப்புக்களையும் அதிகாரத்தையும் அனுபவித்துப் பழகிய தரப்புகளிடமிருந்து எதிர்ப்பு வரத்தான் செய்யும். தன்னல அக்கறை கொண்ட சக்திகளிடமிருந்தும் பொறுப்புக்கூறலுக்கு பழக்கப்படாத சமூக அடுக்குகளில் இருந்தும் நிச்சயமாக எதிர்ப்புக் கிளம்பவே செய்யும்.

இந்த இடத்தில்தான் பொறுப்புக்கூற வைக்கப்படுவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதற்கு ஒரு தந்திரோபாயமாக சகல தரப்புகளையும் அரவணைத்துச் செயற்படும் அணுகுமுறை முக்கியமாகிறது. அத்துடன் சிவில் சமூக அமைப்புக்கள், மிதவாதப் போக்குடைய எதிர்க்கட்சிகள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களினதும் பங்கேற்பும் முக்கியமாகிறது. நீண்டகாலமாக எட்ட முடியாததாக இருந்துவரும் தேசிய நல்லிணக்கம் சாத்தியமாகக்கூடும் என்பதுடன் துரித பொருளாதார அபிவிருத்திக்கான ஆற்றலும் வந்துசேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிப்படையான விசாரணைக்கு சர்வதேச நீதிப்பொறிமுறை இடைஞ்சல் விளைவிக்குமா?

பனங்காட்டான்

உலகில் பலவிதமான விளையாட்டுகள் உண்டு. அவற்றுள் சில சர்வதேச பிரபல்யம் பெற்றவை. துடுப்பாட்டம் எனப்படும் கிரிக்கெட் இதில் தனித்துவமானது.

இவ்வாறு குறிப்பிடுவதற்கு காரணிகள் பல உண்டு. ஒருநாள் போட்டியிலிருந்து ஐந்து நாட்கள் வரையான டெஸ்ட் போட்டி என இவைகளை வகைப்படுத்தலாம். மற்றெல்லா விளையாட்டுகளையும்விட துடுப்பாட்டத்திலுள்ள சிறப்பு, போட்டி நடைபெறும் மைதானத்தில் இதற்கு மட்டுமே 'ஸ்கோர் போர்ட்' என்று அழைக்கப்படும் ஓட்ட (ரன்ஸ்) விபரம் உடனுக்குடன் பார்வைக்கு தெரியும் வகையில் அறிவிக்கப்படும்.

ஒரு பந்து வீச்சுக்கு ஒரு ஓட்டமா, இரண்டு ஓட்டங்களா, பௌண்டரி எனப்படும் நான்கு ஓட்டங்களா அல்லது சிக்ஸர் எனப்படும் ஆறு ஓட்டங்களா என்று ஸ்கோர் போர்ட் மாறிக்கொண்டேயிருக்கும். இதனால் ஒவ்வொரு நாளும் ஆட்ட முடிவில் அன்றைய ஸ்கோர் எவ்வளவு என்பது தெரிய வரும்.

செம்மணியிலுள்ள அரியாலை சித்துப்பாத்தி மயான மனித புதைகுழியிலிருந்து தினமும் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை கிரிக்கெட் ஸ்கோர் பாணியில் தினமும் ஊடகங்கள் ஊடாக வெளிவந்து கொண்டிருக்கிறது. மனதுக்கு இறுக்கமாகவும் துயரமாகவும் இருக்கும் இந்த எண்ணிக்கை இப்போது நாளாந்த செய்தியாகிவிட்டது.

அரச பயங்கரவாதத்தின் கூலிப்படைகளாக செயற்பட்ட ராணுவத்தினர் நடத்திய படுகொலைகளின் எண்ணிக்கை ஒவ்வொருவரது மனதையும் பதைபதைக்க வைக்கிறது. இன்னும் எத்தனை மனித எலும்புக்கூடுகள் மீட்கப்படப் போகின்றனவோ என்ற அச்சம் எல்லோர் மனதிலும் குடிகொண்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக ஐம்பத்திமூன்று நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணியில் ஒவ்வொரு நாளும் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை உடனடியாக அறிவிக்கப்படுகிறது. இந்த மாதம் ஐந்தாம் திகதிவரை இதன் எண்ணிக்கை 240 ஆகியுள்ளது.

உயரமானவர்கள், சற்று குட்டையானவர்கள், குழந்தைகள் என்று இவை காணப்படுகின்றன. பாடசாலைச் சிறாரின் பாவனைக்கான உபகரணங்கள், பால்போச்சிகள், புத்தகப் பைகள் என்பனவும் எலும்புகளோடு கிடக்கக் காணப்பட்டன. ஒரு குழந்தையின் எலும்புக்கூடு இன்னொரு எலும்புக்கூட்டின் மார்போடு அணைந்தவாறு மீட்கப்பட்டது.

உயரமான ஒரு எலும்புக்கூட்டுக்கு அருகே சற்று உயரம் குறைந்த எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டது. இரண்டு எலும்புக்கூடுகளுக்கும் மேலே குறுக்காக இன்னுமொரு எலும்புக்கூடு இருந்தது. கடந்த வாரம் மீட்கப்பட்ட ஒரு எலும்புக்கூடு கால்களை மடித்து உட்கார்ந்த நிலையில் காணப்பட்டது. ஒருவர் நிஷ்டையில் இருப்பது போன்ற காட்சி இது.

இனியும் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை எந்தளவுக்கு செல்லும் என்பதை அங்கு பணியாற்றுபவர்கள் கூற முடியாதுள்ளனர். செம்மணியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிரிஷாந்தி வழக்கில் குற்றவாளியாக நிருபிக்கப்பட்ட ராணுவ கோப்ரல் ராஜபக்ச தெரிவித்த நானூறுக்கும் அதிகமான மனிதப்புதைகுழி சித்துப்பாத்திதான் என்பது இப்போது அடையாளங்கள் ரீதியாக பார்க்கப்படுகிறது.

இந்தப் படுகொலைகளுக்கு உத்தரவிட்ட ராணுவ உயர் அதிகாரிகளின் பெயர்களும் ஓரளவுக்கு தெரியவந்துள்ளது. எனினும், நீதிமன்றம் ஒன்றில் கோப்ரல் ராஜபக்ச அதனைத் தெரிவிக்கும் வரை அவர்கள் மீது அதிகாரபூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது போகலாம். சர்வதேச விசாரணை ஒன்றுக்கு இடமளிக்கப்பட்டால் இப்படுகொலை சம்பந்தமான சகல விபரங்களையும் தம்மால் வெளிப்படுத்த முடியுமென கோப்ரல் ராஜபக்ச தமது குடும்பத்தவர்கள் மூலம் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார். இதற்குச் சாதகமான பதில் எதுவும் இதுவரை இல்லை.

**"**
**தமிழின அழிப்பு என்ற நீள்வரலாற்றில் ஓரங்கமே செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள். இங்கிருந்து மீட்கப்படும் மனித எச்சங்களே அரச பயங்கரவாதத்தின் அடையாளம். புதைகுழிகளுக்கு வெளிப்படையான விசாரணையை அறிவிப்பவர்கள் சர்வதேச நீதிப்பொறிமுறையை எதற்காக மறுக்க வேண்டும்?**

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமர திஸ்ஸநாயக்க மனிதப் புதைகுழி இடத்தை நேரில் சென்று பார்வையிடலாமென அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருந்தார். ஆனால் அது நடைபெறவில்லை. எனினும் இது தொடர்பான தமது கருத்தை யாழ்ப்பாண நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அநுர குமர தெரிவித்தார். மனிதப் புதைகுழிகள் குறித்து வெளிப்படையாக விசாரணை நடைபெறுமென்று ஒரு வரியில் இவரது அறிவிப்பு வந்தது.

சொன்னவர் ஜனாதிபதி என்றபடியால் இவரது ஒரு வரி ஊடகங்களில் தலைப்புச் செய்தியானது. நீதவான் உத்தரவின் பேரில் அகழ்வுப்பணி இடம்பெறுவதாலும், அரச தரப்பு துறைசார் நிபுணர்கள் இதில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருப்பதாலும் பொதுவான வெளிப்படைத் தன்மை அங்கு ஏற்கனவே காணப்படுகிறது. அகழ்வுப்பணி முழுமையாக முடிந்த பின்னர், சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரணைகள் நடைபெறுமெனவும், குற்றவாளிகள் நீதியின் முன்னால் நிறுத்தப்படுவர் எனவும் எந்த உறுதிப்பாட்டையும் அரச தரப்பில் இதுவரை எவரும் வழங்கவில்லை.





மனிதப் புதைகுழிகளை அகழும் பணியில் அரசதரப்பு இதுவரை எந்த முட்டுக்கட்டையையும் போடவில்லை. இந்தப் புதைகுழிகளுக்குப் பொறுப்பு மகிந்த ராஜபக்சவும், ரணில் விக்கிரமசிங்கவுமே என்று அமைச்சர் ஒருவர் பகிரங்கமாகக் குறிப்பிட்டதையும் இங்கு கவனிக்க வேண்டும். அதேசமயம் இனவாதம் கக்கும் கடற்படை முன்னாள் அதிகாரி சரத் வீரசேகர, முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில போன்றவர்களின் கருத்துகள் வேறாக உள்ளன. நாடு முழுவதும் மனிதப் புதைகுழிகள் உள்ளன. செம்மணிக்கு மட்டும் எதற்காக ஆய்வு நடத்த வேண்டுமென்று இவர்கள் கேட்கின்றனர். இவர்கள் கருத்தின்படி பார்க்கின் இலங்கையை மனிதகுழித்தீவு என்று அழைக்க வேண்டுமென ஆலோசனை கூறுவது போல இருக்கிறது.

இவ்வாறாக ஏறுக்கு மாறாக கருத்துகள் வெளிவந்து கொண்டிருக்கும் வேளையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முக்கியமான பதினாறு பரிந்துரைகளை அரச உயர்மட்டத்துக்கு எழுத்து மூலம் வழங்கியுள்ளது. மனிதப் புதைகுழி விசாரணைகளில் எந்தச் சமயத்திலும் ராணுவத்தினரின் ஈடுபாட்டுக்கு அனுமதி அளிக்கக்கூடாதென ஆணைக்குழு கேட்டுள்ளது. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சருக்கும் ராணுவத் தளபதிக்கும் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக காணாமல் போனவர்களின் குடும்ப உறவினர்களையோ அல்லது எந்தவொரு உள்ளூர் அதிகாரிகளையோ அல்லது சிவில் சமூக பிரதிநிதிகளையோ எவரும் தொடர்பு கொள்ளக்கூடாதென அறிவுறுத்துமாறும் ஆணைக்குழு கேட்டுள்ளது. மனிதப் புதைகுழிகளின் தற்போதைய நிலைமையை சுட்டிக்காட்டியுள்ள ஆணைக்குழு தனித்தனியாக வெவ்வேறு துறைசார் தலைமைக்கும் பரிந்துரைகளை அனுப்பியுள்ளது. நீதியமைச்சர், பொலிஸ் மாஅதிபர், உயர்கல்வி அமைச்சர் ஆகியோர் இதில் அடங்குவர்.

ஏற்கனவே புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் (உடலங்கள்) ஆடைகள் இல்லாமலும், ஆழமற்ற குழிகளில் புதைக்கப்பட்டதுமானது நீதிக்குப் புறம்பான கொலைகளைக் குறிப்பிடுவதாக இருப்பதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மனிதப் புதைகுழி தொடர்பான சாட்சிகள், ஊடகங்கள் என்பவற்றை அச்சுறுத்துவது தவிர்க்கப்பட வேண்டுமெனவும் ராணுவத்திடம் ஆணைக்குழு கேட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான அவகாசம் இருப்பது அவசியமானது எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஆரம்பத்திலிருந்து கடந்த வாரம்வரை அகழ்வுப் பணியை நேரடியாக பார்வையிட்டு வந்த யாழ்ப்பாண நீதவான் ஏ. ஆனந்தராஜா பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் சமூக மட்டத்திலிருந்து கிளப்பப்பட்டுள்ளது. இதுபற்றிக் குறிப்பிட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட நீதவான் பதவி உயர்வு பெற்றுச் சென் றால் அவருக்குப் பதிலாக பொறுப்பேற்கும் நீதவானுக்கும் அனைத்து வசதிகளும் கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென ஆணைக்குழு சுட்டியுள்ளது.

இது இவ்வாறிருக்க, இலங்கை அரசு சட்டத்துறை, சட்ட அமலாக்கத்துறை, சட்ட மாஅதிபர் இலாகா போன்றவற்றை நேர்கோட்டில் இணைத்து அதனூடாக நீதி வழங்குவதை அரசியலாக்கி வருவதாக குற்றம் சுமத்தும் எதிர்க்கட்சியினர் இதன் அடிப்படையில் கூட்டணி ஒன்றை உருவாக்க முயன்று வருகின்றனர். இவர்கள் எவரும் இதுவரை மனிதப் புதைகுழி தொடர்பாக எந்தக் கருத்தும் தெரிவிக்காது சிங்களப் படைத்தலைமைகளையும் ராணுவத்தையும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளை அடையாளம் காண தடயவியல், தொல்பொருளியல் துறைசார் நிபுணர்கள் சர்வதேச நிபுணத்துவ ஆலோசனையை பெற அனுமதிக்கப்படாதவரை எதிர்பார்க்கப்படும் நீதி கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

புதைகுழிகள் குறித்து வெளிப்படையான விசாரணை இடம்பெறுமென்று ஓராயிரம் தடவைகள் அரசாங்கம் சொன்னாலும் அதனை நம்புவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் தயாராகவில்லை. தமிழின அழிப்பு என்ற நீள்வரலாற்றில் ஓரங்கமே செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள். இங்கிருந்து மீட்கப்படும் மனித எச்சங்களே அரச பயங்கரவாதத்தின் அடையாளம். புதைகுழிகளுக்கு வெளிப்படையான விசாரணையை அறிவிப்பவர்கள் சர்வதேச நீதிப்பொறிமுறையை எதற்காக மறுக்க வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி திசநாயக்கவின் கச்சதீவு விஜயம்:

## டில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் அனுப்பிய சந்தடியற்ற செய்தி!



நிருபமா சுப்பிரமணியன்

சீனாவின் ரியான்ஜின் நகரில் ஜனாதிபதிகள் சி ஜின்பிங்குடனும் விளாடிமிர் புட்டினுடனும் கமராக்களுக்கு முன்னால் நின்று பிரதமர் நரேந்திர மோடி தோழமை உறவுகளை வெளிக்காட்டியதை பார்த்து இந்தியா வடக்கு நோக்கி கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்த அதேவேளை, இந்தியாவின் தென்திசை அயல்நாடு புதுடில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் சந்தடியில்லாமல் ஒரு செய்தியை அனுப்பியது.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்துக்கு இந்த வருடத்தில் நான்காவது விஜயத்தை மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க எந்த அறிவிப்பும் செய்யாமல் கடற்படையின் அதிவேக படகில் கச்சதீவுக்கு சென்றார். தரிசு நிலமான அந்த தீவில் காலடி வைத்த முதல் இலங்கை ஜனாதிபதி என்ற பெருமைக்கு அவர் உரியவராகியிருக்கிறார்.


அவ்வாறு செய்ததன் மூலமாக ஜனாதிபதி திசநாயக்க கச்சதீவை இலங்கையின் பிராந்தியம் என்பதை அடையாளப்படுத்தியிருக்கிறார். கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதி. பாக்கு நீரிணையில் உள்ள அந்த தீவு தனக்கே சொந்தம் என்று உரிமை கோரிய இலங்கைக்கு இந்தியா 1974 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் விட்டுக்கொடுத்தது. 'இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான கடல் எல்லை மற்றும் அதனுடன் தொடர்புடைய விவகாரங்கள் தொடர்பிலான உடன்படிக்கை' என்று அது அழைக்கப்படுகிறது.( அந்த உடன்படிக்கை பிறகு 1976 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லையை வகுப்பதற்கான இன்னொரு உடன்படிக்கைக்கு வழிவகுத்தது).

அவ்வாறிருந்தாலும், இராமேஸ்வரத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் இருக்கும் கச்சதீவு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் திரும்பத் திரும்ப ஒரு உரசலுக்கான விடயமாகவும் விளங்குகிறது. காலனித்துவ யுகத்திலோ அல்லது சுதந்திரத்துக்கு பின்னரான காலப்பகுதியிலோ இந்தியாவின் எந்தவொரு வரைபடத்திலும் எல்லை வரையறை செய்யப்படவில்லை என்ற போதிலும், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இராமேஸ்வரம் மீனவர்களின் உணர்வுகளை சாந்தப்படுத்துவதற்காக, மக்கள் வாழாத கச்சதீவை 'மீட்பது' குறித்து அடிக்கடி பேசுகிறார்கள். பாக்குநீரிணையின் இருமருங்கிலும் உள்ள மீனவர்களுக்கு இடையில் (கிடைப்பதற்கு அரிதாக இருக்கும்) வளங்கள் தொடர்பிலான முரண்நிலையே இந்த பிரச்சினையின் மையமாக விளங்குகிறது.

சுருக்கமாக சொல்வதானால், இழுவைப்படகுகள், பை போன்ற பெரிய வலைகள் மற்றும் இரட்டை வலைகள் போன்ற நீண்டகாலத்துக்கு தொடர்ந்து பயன்படுத்த முடியாத மீன்பிடி முறைகளை தமிழ்நாட்டு மீனவர்கள் கடைப்பிடித்து வந்ததால் பாக்கு நீரிணையின் இந்தியப் பக்கத்தில் இருந்த கடல் வளங்கள் வழித்து துடைக்கப்பட்டுவிட்டன. 30 வருடகால உள்நாட்டுப் போரின்போது கண்டிப்பான பாதுகாப்பு கட்டுப்பாடுகளின் விளைவாக யாழ்ப்பாண மீனவர்கள் கடலுக்கு செல்லாத காரணத்தால் பெருமளவு வளங்களைக் கொண்டதாக இருந்த பாக்குநீரிணையின் இலங்கைப் பக்கம் இந்திய மீனவர்களை கவர்ந்திழுப்பதாக தோன்றுகிறது.

அனேகமாக தினமும் இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் செய்கின்ற ஊடுருவல்கள் அவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்வதிலும் படகுகளையும் வலைகளையும் பறிமுதல் செய்வதிலும் வந்து முடிகிறது.

ஆனால், மாற்று வாழ்வாதாரங்களை உருவாக்குவதில் அல்லது மீன்பிடித்துறையை பல்வகைப்படுத்துவதில் உள்ள பிரதான சவால்களை கையாளுவதற்கு பதிலாக, தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தலைவர்கள் மீனவர்களின் சகல பிரச்னைகளுக்கும் கச்சதீவே பதில் என்ற



> “ கச்சதீவை இந்தியா மீட்பதன் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடியதாக இருக்கும் என்றால், எதற்காக மாநிலத்தைச் சேர்ந்த மீன்பிடிப்படகுகள் மிகவும் தொலைவில் இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாட்டு கரையோரங்களுக்கு அண்மித்தாக செல்கின்றன. அதை விடவும் தொலைவில் கிழக்கு இலங்கையின் கரையோரத்துக்கு அந்த படகுகள் செல்கின்றன. ”

மாயையை ஊக்குவிக்கிறார்கள்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் புதிய கட்சியொன்றை ஆரம்பித்து அரசியலில் குதித்திருக்கும் தமிழ் சினிமா நடிகர் விஜய் மிகவும் அண்மையில் அந்த மாயையை மேலும் வளர்ப்பதற்கு தனது சார்பிலான பங்களிப்பைச் செய்தார். மதுரையில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் , 'எங்களது மீனவர்கள் பாதுகாப்பாக இருக்கக்கூடியதாக கச்சதீவை மீட்டெடுத்து மாநில மீனவர்களுக்கு சிறியதொரு உதவியை அரசாங்கம் செய்ய வேண்டும் " என்று கேட்டுக்கொண்டார்.

கச்சதீவைத் திரும்பப் பெறவேண்டும் என்று கோரிக்கை விடுத்து தமிழ்நாடு அரசாங்கம் நான்கு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்த உடன்படிக்கையை 'அரசியலமைப்புக்கு முரணானது' என்று இரத்துச் செயயுமாறு கோரி இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. பிரதமர் மோடியும் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் 2024 லோக்சபா தேர்தல் பிரசாரங்களின்போது 'இலங்கைக்கு கச்சதீவை காங்கிரஸ் சொரணையற்ற முறையில் விட்டுக் கொடுத்துவிட்டது' என்று கூறி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றினர்.

ஆனால், கச்சதீவை இந்தியா மீட்பதன் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்னைகளை தீர்க்கக்கூடியதாக இருக்கும் என்றால், எதற்காக மாநிலத்தைச் சேர்ந்த மீன்பிடிப்படகுகள் மிகவும் தொலைவில் இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாட்டு கரையோரங்களுக்கு அண்மித்தாக செல்கின்றன. அதை விடவும் தொலைவில் கிழக்கு இலங்கையின் கரையோரத்துக்கு அந்த படகுகள் செல்கின்றன.

விஜயின் கருத்துக்கு பதிலளித்த இலங்கையின் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கச்சதீவின் அந்தஸ்தில் எந்த மாற்றத்துக்கும் இடமில்லை என்று திட்டவட்டமாக கூறினார். அடுத்த வருடம் தமிழ்நாடு சட்டசபை தேர்தல் நடைபெறவிருப்பதால் தேர்தல் மேடைகளில் நிகழ்த்தப்படுகின்ற உரைகள் மீது கவனம் செலுத்த வேண்டாம் என்று இலங்கையர்களை ஹேரத் கேட்டுக் கொண்டார் என்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையை பொறுத்தவரை, ஜனாதிபதி திசநாயக்க கச்சதீவில் வைத்த காலடி அதிகப் பெரும்பான்மையாக தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்துக்கு தொடர்ந்து நேசக்கரம் நீட்டும் தேசிய மக்கள் சக்தியின் நடவடிக்கைகளுக்கு நிச்சயமாக உதவும். யாழ்ப்பாண மக்களில் பெரியதொரு பிரிவினர் தங்களது வாழ்வாதாரத்துக்காக கடலை நம்பியிருக்கின்றனர். உள்நாட்டுப் போரின்போது தமிழ்ப் போராளி இயக்கங்களுக்கு பெருந்தன்மையுடன் உதவிய (பாக்குநீரிணைக்கு அப்பால் இருக்கும்) தங்களது தமிழ்ச் சகோதரர்கள் இப்போது தங்களுக்கு எதிராக செயற்படுகிறார்கள் என்ற எண்ணம் யாழ்ப்பாண மீனவர்கள் மத்தியில் வலுப்பெற்றிருக்கிறது. கச்சதீவுக்கு விஜயம் செய்ததன் மூலமாக இலங்கையின் தமிழ் மீனவர்களுக்கு உறுதுணையாக தான் நிற்கிறார் என்ற செய்தியை வெளிப்படுத்துவதற்கு கற்பனைத்திறனான முறையில் திசநாயக்கவுக்கு உதவியிருக்கிறது.

கடந்த சில மாதங்களாக திசநாயக்கவின் செல்வாக்கிற்கு ஏற்பட்டதாக கருதப்படும் ஒரு தொய்வை மாற்றியமைக்கவும் இந்த கச்சதீவு விஜயம் உதவும். பரந்தளவிலான பொருளாதார மாற்றங்களை கொண்டுவருவதாக அதுவும் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையின் விளைவாக மிகவும் கடுமையான நிபந்தனைகளில் மாற்றங்களைச் செய்வதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்துக்கொண்டே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. ஆனால், அதனால் தற்காலிகமான ஏற்பாடுகளையே செய்யக்கூடியதாக இருக்கிறது. அரசாங்கம் மக்களின் அரசியல் ஆதரவை இழந்து வருகின்றது என்பதை மே மாதத்தைய உளளூராட்சி தேர்தல்கள் நிரூபித்தன.

ஆனால், முன்னைய அரசாங்கங்களின் ஊழல்தனமான அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளை சட்டத்தின் நிறுத்துவது போன்ற மற்றைய வாக்குறுதிகளை நிறைவேற்றவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இதுவரையில் கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் முக்கியமான தலைவர். கல்வியாளரான தனது மனைவிக்கு பிரிட்டிஷ் பல்கலைக்கழகம் ஒன்று கௌரவ பேராசிரியர் பட்டம் வழங்கிக் கௌரவித்த நிகழ்வில் பங்கேற்பதற்கு அரச பணத்தை தவறாகப் பயனாபடுத்தியதாக விக்கிரமசிங்க மீது குற்றஞ் சாட்டி வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் ஆதரவு இல்லாத ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்ற வகையில் விக்கிரமசிங்க மிகவும் இலகுவான ஒரு இலக்காக இருந்தார். அவரது கைது (இப்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்) மேலும் பல முக்கியமான அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கைது செய்யப்படலாம் என்ற எதிர்பார்ப்பை ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்டுத்தியிருக்கலாம். ஆனால், ராஜபக்ச குடும்பத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவரை கைதுசெய்வது அரசாங்கத்தைப் பொறுத்தவரை மிகவும் கஷ்டமானதாக இருக்கும்.

இத்தகைய அதிகாரப் போட்டியின் பின்புலத்தில், கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்று தனது விஜயத்தின் மூலம் ஜனாதிபதி திசநாயக்க காண்பித்தது அரசாங்கத்தின் அடிப்படை ஆதரவாளர்களான சிங்கள தேசியவாத வாக்காளர்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கை நிச்சயமாக அதிகரித்திருக்கும். அந்த தேசியவாதிகளைப் பொறுத்தவரை, வடக்கில் இருந்து தெற்கு வரை இலங்கையின் ஒவ்வொரு அங்குல நிலமும் பௌத்த மதத்தை பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், இந்தியாவுடன் மிகவும் மென்மையான போக்கை கடைப்பிடிப்பதாக தன்னை விமர்சிப்பவர்களுக்கு ஒரு செய்தியையும் திசநாயக்க கூறியிருக்கிறார்.

இந்தியாவுடன் அவர் செய்துகொண்ட உடன்படிக்கை தொடர்பில் கண்டனங்கள் எழுந்தன. டிஜிற்றல் மாற்றம் தொடர்பான உடன்படிக்கைக்கு எதிராக இலங்கையின் உயர்நீதிமன்றத்தில் போட்டி அரசியல்வாதிகள் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்.

கச்சதீவுக்கு சென்றதன் மூலம் இலங்கையின் நலன்களை பாதுகாப்பதில் தனது உறுதிப்பாட்டை அவர்களுக்கு ஜனாதிபதி காண்பித்திருக்கிறார்.

கச்சதீவில் கடலோடிகளின் காவல் தெய்வம் புனித அந்தோனியாருக்கு ஒரு சிறிய தேவாலயம் கச்சதீவில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இருக்கிறது. வருடாந்தம் மார்ச் மாதத்தில் அந்த தேவாலயத்தில் நடைபெறும் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக வரலாற்று ரீதியாக யாழ்ப்பாணத்தில் இருந்தும் இராமேஸ்வரத்தில் இருந்தும் யாத்திரிகர்கள் வருவர். உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு கச்சதீவுக்கு பெருமளவில் யாத்திரிகர்கள் வரத் தொடங்கினார்கள். தேவாலயமும் புனருத்தாரணம் செய்யப்பட்டு அழகாக காட்சியளிக்கிறது.

கச்சதீவுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகியவையும் பிரதான நிலப்பரப்பில் இருந்து சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து வருகின்றன. 1.6 கிலோ மீட்டர் நீளமும் 300 மீட்டர் அகலமும் கொண்ட இந்த தீவு சுற்றுலா மையமாக மாற்றப்படலாம் என்று இப்போது பேசப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் கச்சதீவை மீட்கவேண்டும் என்ற பேச்சுக்கள் அதுவும் குறிப்பாக தேர்தல் நெருங்கும் இந்த நேரத்தில் முடிவுக்கு வருவது சாத்தியமேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வட்டுவாகல் பாலம் நினைவுகளை அழிப்பதா? பேணுவதா?

நிலாந்தன்

கடந்த இரண்டாம் திகதி, அனுர முல்லைத்தீவில் புதிய வட்டுவாகல் பாலத்துக்கான நிர்மாணப்பணிகளை தொடக்கி வைத்தார். வட்டுவாகல் பாலத்தைப் புதிதாகவும் நவீனமாகவும் கட்ட வேண்டும். போரால் அதிகம் பாதிக்கப்பட்ட அந்த மாவட்டத்தை பொருளாதார ரீதியாக மேம்படுத்த வேண்டும். அதேசமயம், போரால் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம் என்ற அதே காரணத்துக்காக பாதிக்கப்பட்ட மக்களின் நோக்கு நிலையில் இருந்து இந்த இடத்தில் மற்றொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பழைய பாலத்தை ஒரு நினைவுச் சின்னமாகப் பேண வேண்டும் என்று கேட்கின்றார்கள். புதிய பாலத்தைக் கட்டும்போது அதன் பார்வைப் புலத்துக்குள் வரக்கூடியவாறு இப்போதுள்ள பாலத்தை ஒரு நினைவுச் சின்னமாகப் பாதுகாக்க வேண்டும் என்றும் புதிய பாலத்தின் முகப்பில் பழைய பாலத்தின் வரலாற்று முக்கியத்துவம் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை விரிவுரையாளர் ஒருவர் கூறினார்.

வட்டுவாகல் என்ற பெயர் வெட்டு வாய்க்கால் என்பதிலிருந்து வந்தது. வெள்ளப்பெருக்கான காலங்களில் நீரை வெட்டிக் கடத்திவிடும் வழி என்ற அர்த்தத்தில் வெட்டு வாய்க்கால் என்று அழைக்கப்பட்ட பகுதி பின்னாளில் மருவி வட்டுவாகல் என்று அழைக்கப்படுகிறது. இப்போதுள்ள பாலத்தைக் கட்டியவர் "அடங்காத் தமிழன்" என்று அழைக்கப்பட்ட சி.சுந்தரலிங்கம். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் 1950ல் பாலம் கட்டப்பட்டது. அதே காலப்பகுதியில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியும் நிறுவப்பட்டது.

ஈழத் தமிழர்களின் நவீன வரலாற்றில் இரண்டு முக்கிய பேரழிவுகளின்போது வட்டுவாகல் பாலம் பிணங்களுக்குச் சாட்சியாக இருந்தது. கூட்டுத் தண்டனைக்கும் கூட்டுத் தோல்விக்கும் சாட்சியாக இருந்தது.

முதலாவது பேரழிவு, ஆழிப்பேரலை. இரண்டாவது பேரழிவு, இறுதிக்கட்டப் போர். ஆழிப்பேரலையின் போது சுருண்டு கறுத்த பிணங்கள் அந்தப் பாலத்தின் இரு மருங்கிலும் ஒதுங்கின. இறுதிக்கட்டப் போரின் போதும் அப்படித்தான் அது பிணங்கள் ஒதுங்கும் ஒரு பாலமாக இருந்தது. மழைக்காலங்களில் குறிப்பாக வற்றுப் பெருக்கு காலங்களில் இறால் விளையும் கடல். அங்கே இயற்கை அனர்த்தம் ஒன்றின் போதும் இறுதிக்கட்டப் போரிலும் தமிழ் மக்களின் பிணங்கள் விளைந்தன.

இறுதிக்கட்டப் போரில் சரணடைந்த பின் காணாமல் போகச் செய்யப்பட்ட பலருக்கும் அந்தப் பாலந்தான் கடைசியாக நடந்த வழி. கூட்டுத் தோல்வியோடும். அவமானத்தோடும் ஒரு சிற்றரசை இழந்து நடந்த வழி. சரணடைந்த வழி. அந்த வழியால் போன பலர் பின்னர் உயிருடன் வரவில்லை. எனவே அந்தக் கூட்டு நினைவுகளின் தடமாக, ஒரு நினைவுச் சின்னமாக அதைப் பேண் வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக உருவாக்கப்படும் அபிவிருத்தித் திட்டம் ஒன்றில் அந்த மக்களுடைய கூட்டு உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். இதுவிடயத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக எழுந்த வாதப்பிரதிவாதங்களை இங்கே சுட்டிக் காட்டலாம்.

சேது சமுத்திரத்தை ஆழமாக்குவதற்காக ராமர் பாலம் என்று கருதப்பட்ட திட்டுக்களை அகற்றுவதா? இல்லையா? என்ற விவாதம் நடந்த பொழுது மத நம்பிக்கையோடு அந்த விவகாரத்தை அணுகிய பலரும் ராமர் பாலத்தின் மிஞ்சியுள்ள பகுதிகளைப் பேணவேண்டும் என்று கேட்டார்கள். இதுவிடயத்தில் இந்திய வராற்றியலாளரான ரோமிலா தார்பர் ஓர் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் கூறிய கருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டியவை. ரோமிலா தார்பர் ஒரு மதவாதி அல்ல. எனினும் அவர் சொன்னார், ராமர் பாலம் ஓர் ஐதீக நம்பிக்கையாக இருக்கலாம், அதற்கு விஞ்ஞானபூர்வமான ஆதாரங்கள் இல்லாமலிருக்கலாம், ஆனால் அது ஒருதொகுதி மக்களின் கூட்டு நம்பிக்கைகளோடு தொடர்புடைய ஒன்றாகக் காணப்படுகிறது. எனவே இந்த இடத்தில் அந்த மக்களுடைய கூட்டு உணர்வை மதிக்க வேண்டும். அதனால் ராமர் பாலத்தின் மிஞ்சியிருக்கும் பகுதிகளைப் பேணலாம் என்று ரோமிலா கருத்து தெரிவித்தார்.

அதாவது ஒரு மரபுரிமைச் சின்னத்தை அல்லது இறந்த காலத்தின் நினைவுச் சின்னம் ஒன்றைப் பேணும் விடயத்தில் அந்த நினைவுச் சின்னத்தை தமது இறந்த காலத்தோடு தொடர்புறுத்தி உணர்வுபூர்வமாக சிந்திக்கின்ற மக்களின் கூட்டு உணர்வை, கூட்டு விருப்பத்தை மதிக்க வேண்டியது அவசியம் என்பதே ரோமிலா எகிறது.

ஆனால் யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின் யுத்த அழிவுச் சின்னங்கள்,தடயங்கள் அவ்வாறு பாதுகாக்கப்படவில்லை. மிலன் குண்டெரா கூறுவது போல அவை துடைத்தழிக்கப்பட்டு, அவற்றுக்கு வெள்ளை அடிக்கப்பட்டது.

1996க்குப்பின் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முடுக்கி விட்டபோது, பல ஆண்டுகளுக்கு முன் எரிக்கப்பட்ட நூலகத்தின் ஒரு பகுதியை நினைவுச் சின்னமாகப் பேண வேண்டும் என்று யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களான சனாதனன்,அகிலன் போன்றவர்கள் வற்புறுத்தி னார்கள். அதுபோலவே இறுதிக் கட்டப் போரின்பின் கிளிநொச்சி அபிவிருத்தி செய்யப்பட்ட போது, அங்கே கண்டி வீதியில், யுத்த காலத்தில் தகர்க்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி, கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் ரவைகளால் காயப்பட்ட சுவரின் ஒரு பகுதி என்பவற்றை நினைவுச்சின்னங்களாகப் பேண வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. எனினும், அபிவிருத்தி என்ற போர்வை யில் அனைத் துக் காயங்க ளின் மீதும் வெள்ளை அடிக்கப்பட்டு விட்டது.

> **சுனாமி, இறுதிக்கட்டப் போர் என்பவற்றின் ஞாபகச் சின்னமாக இப்போதுள்ள வட்டுவாகல் பாலத்தைப் பேணும் அதேசமயம், புதிய பாலத்தை நவீனமாகக் கட்டி எழுப்பலாம் என்று பாதிக்கப்பட்ட மக்களும் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பவர்களும் கேட்கின்றார்கள்.**

குறிப்பாக படைத்தளபதியாக இருந்த சந்திரசிறி வடக்கின் ஆளுந ராக இருந்த காலகட்டத்தில் யாழ்ப்பா ணம் பழைய பூங்கா சிதைக்கப்பட்டது. பழைய பூங்கா என்பது காலனித்துவ காலத்தின் நினைவுச் சின்னங்களில் ஒன்று. அது யாழ்ப்பாணத்தை நிர்வகித்த ஒரு வெள்ளைக்காரரின் தனிப்பட்ட சொத்தாக இருந்தது. அதை அவர் ஒரு பூங்காவாக, மகிழ்ச்சி மையமாக உருவாக்கினார். காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வந்தபின், அது கைவிடப்பட்ட ஒரு நகர்ப்புறக் காடாக மாறியது. அதன் முதுமரங்களில் வாழ்ந்த லட்சக்கணக்கான வெளவால்கள் பின்மாலை வேலைகளில் யாழ்ப்பாணத்து வானில் பறந்துசெல்லக் காணலாம்.

உலகம் முழுவதும் நவீன நகரங்களை உருவாக்கும் பொழுது அவற்றின் சுவாசப்பையாக சிறிய நகர்ப்புறக் காடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே இருந்த ஒரு நகர்ப்புறக் காட்டை அதைவிட முக்கியமாக ஒரு மரபுரிமைச் சொத்தை சந்திரசிறீ மக்களின் அனுமதியின்றியே சிதைத்து விட்டார். இப்பொழுது பழைய பூங்காவின் ஒரு மூலையில் ஒரு புதியபூங்கா ஹைபிரிட் மரங்களோடு உருவாக்கப்பட்டிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்பு யாழ் அரச அதிபர் பழைய பூங்காவைப் பாதுகாப்பது தொடர்பான சந்திப்பொன்றில் ஈடுபட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அங்கிருந்த முதுமரங்கள் பல ஏற்கனவே அழிக்கப்பட்டு விட்டன. அபிவிருத்தி என்ற பெயரில் ஒரு மரபுரிமைச் சொத்தைச் சிதைத்து அதற்குப் பதிலாக அதன் மூலையில் ஒரு சிறிய ஹைபிரிட் பூங்கா அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழும். இறந்த காலத்தின் காயங்களைத் தொடர்ந்து பேண வேண்டுமா?கூட்டுத் துக்கத்தை தொடர்ந்து காவ வேண்டுமா? என்று. ஆனால் இந்தக் கேள்வியை முதலில் கேட்க வேண்டியது அரசுக் கட்டமைப்பிடந்தான். ஏனென்றால் கண்டி வீதி நீட்டுக்கும், வன்னியிலும், யுத்த வெற்றியின் நினைவுச் சின்னங்களைப் பேணும் ஒரு சிறிய நாட்டில், தமிழ் மக்களும் தங்களுடைய நினைவுச் சின்னங்களைப் பேண முற்படுவதில் தவறு என்ன?

மிலன் குண்டெரா கூறுகிறார். "மக்களைத் தீர்த்து கட்டுவதற்கான முதல் அடி அந்த மக்களுடைய நினைவை அழிப்பது. அந்த மக்களுடைய புத்தகங்களை, பண்பாட்டை, வரலாற்றை அழிப்பது. அதன் பின் யாராவது புதிய புத்தகங்களை எழுதுவார்கள்புதிய வரலாற்றைக் கண்டு பிடிப்பார்கள். விரைவில் தேசம் அது என்னவாக இருக்கிறத் என்னவாக இருந்தது என்பதையெல்லாம் மறக்கத் தொடங்கிவிடும்." என்று.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காத ஒரு பின்னணிக்குள், நீதிக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் ஞாபகங்களைப் பேண வேண்டும் என்று கேட்பது ஓர் அரசியல். அதைப்போலவே அந்த ஞாபகங்களை அபிவிருத்தியின் பெயரால் அழிப்பதும் ஓர் அரசியல். அது இனஅழிப்பின் ஒரு பகுதிதான். "மீளக் கட்டுமானம் என்பதே ஒரு வன்முறையாக அமைய முடியும்" என்று குரிய்யா பாடெஸ்க்கு கூறுகிறார்.

1991இல் குரேசியாவில் வுகோவார் நகரத்தில் சேதமாக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி போருக்குப் பின் புனரமைக்கப்பட்டபோது அதை ஒரு நினைவுச் சின்னமாகப் பேணுவது என்று முடிவெடுக்கப்பட்டது. இப்பொழுது அது குரோஷியாவின் வீரத்துக்கும் இறந்தகாலக் காயங்களுக்கும் குறியீடாக நிற்கிறது.

ஆனால், தமிழ்ப் பகுதிகளில் ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 16 ஆண்டுகளிலும் அபிவிருத்தியின் பெயரால் நினைவுச் சின்னங்களாகப் பேணப்பட வேண்டிய பல விடயங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.இப்பொழுது வட்டு வாகல் பாலம்?

சுனாமி, இறுதிக்கட்டப் போர் என்பவற்றின் ஞாபகச் சின்னமாக இப்போதுள்ள வட்டுவாகல் பாலத்தைப் பேணும் அதேசமயம், புதிய பாலத்தை நவீனமாகக் கட்டி எழுப்பலாம் என்று பாதிக்கப்பட்ட மக்களும் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பவர்களும் கேட்கின்றார்கள்.

பழைய பாலம் பதிவாக கடல் மட்டத்துக்குக் கிட்டவாகக் காணப்படுவதால் இயற்கை அழிவுக்கு உள்ளாகக்கூடிய ஆபத்துக்களை அதிகமாகக் கொண்டிருக்கிறது. அதனால் அப்பாலத்தை ஒரு நினைவுச் சின்னமாகப் பேணுவது என்பது மனிதர்களிடமிருந்தும் இயற்கையிடமிருந்தும் அதைப் பாதுகாப்பதுதான். இந்த விடயத்தில் தொழில் நுட்பச் சவால்கள், ஒரு மரபுரிமைச் சொத்தைப் பாதுகாப்பதற்குரிய தொழில்சார் ஏற்பாடுகள் போன்ற எல்லாத் துறைசார் விடையங்களையும் கவனத்திலெடுத்து முடிவெடுக்கலாம்.

பாலத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசிய ஜனாதிபதியும் அமைச்சரும் தமிழ் மக்களின் கூட்டுணர்வை இந்த அரசாங்கம் மதிக்கின்றது என்ற பொருள்படப் பேசினார்கள். அப்படியென்றால் தமிழ் மக்களின் நினைவுகளை அழித்த முன்னைய அரசாங்கங்களைப் போலன்றி இந்த அரசாங்கம் வட்டுவாகல் பாலத்தின் விடயத்தில் ஒரு மாற்றத்தை காட்டுமா? "மீளக் கட்டுமானம் என்பதே ஒரு வன்முறையாக" அமையாது என்று தேசிய மக்கள் சக்தி நிரூபிக்குமா ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் வடக்கு வருகையும் அவர் சொல்லாமல் சொல்லிச் சென்ற செய்திகளும்!

- கந்தையா அருந்தவபாலன்

இம்மாதம் முதலாம் திகதி வடக்கிற்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க யாழ் மாவட்டத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் சில அபிவிருத்தித் திட்டங்களைத் தொடக்கி வைத்து மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டதுடன் கச்சதீவிலும் கால்பதித்துச் சென்றுள்ளார். அவரின் இவ்வருகையானது அவர் இந்நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓராண்டு பூர்த்தியாவதை ஒட்டியது என அவர் தரப்பில் கூறப்பட்டது எனினும் இம்மாதம் 22 ஆம் திகதிதான் அந்த ஓராண்டு நிறைவு நாளாகும். ஜனாதிபதியின் வருகை உத்தியோகபூர்வமானது எனினும் அது அரசியல் நோக்கத்தையும் கொண்டது என்பது வெளிப்படையானது. ஏனெனில் குறித்த திட்டங்களைத் தொடக்கி வைப்பதற்கு ஜனாதிபதிதான் வரவேண்டும் என்றில்லை. ஆனால் அதில் தவறேதும் இல்லை. அரசியலில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கும் அரசியல் செய்யவேண்டியது தவிர்க்கமுடியாதது. அவரின் வருகையின்போது பல விடயங்களை அவர் தனதுரைகளில் வெளிப்படுத்தியிருந்தாலும் வெளிப்படுத்தாத சில முக்கிய செய்திகள் அவர் வருகையிலும், உரைகளில் சொல்லியவற்றிலும், சொல்லாமல் விட்டவற்றிலும் மறைந்திருப்பதை அவதானிக்க முடியும்.

தமிழ் மக்களுக்கெதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளின் சான்றுகளில் ஒன்றாக இன்று பேசப்படும் செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக அவர் சொல்லிய சொல்லாதவிடயங்களை முதலில் நோக்குவோம். அவரின் வருகையின்போது புதைகுழியைப் பார்வையிடக்கூடும் என்ற கதை உலாவவிடப்பட்டிருந்ததுடன் அதனை அவர் பாரவையிடவில்லை என்ற விமர்சனமும் சிலரால் முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அதை பார்வையிடுவதால் எந்த நன்மையும் விளையப் போவதில்லை என்பதற்கப்பால் அவரது உண்மையான அரசியல் நோக்கத்திற்கும் அது பாதகமானது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு அவர் அதைப் பார்வையிடவேண்டுமென்பதல்ல அதற்கான நீதியும் நிவாரணமுமே ஆகும். அதற்கான உண்மையான நீதி என்பது இலங்கையின் இன்றைய நீதித்துறைக் கட்டமைப்பில் நிச்சயம் கிடைக்காது என்பது தமிழ் மக்களின் கடந்தகால கசப்பான பட்டறிவின் விளைவு. இதன்காரணமாகவே தமிழ் மக்கள் தம்மினத்துக்கெதிரான அத்தனை குற்றங்களுக்கும் சர்வதேச விசாரணையைக் கோரிநிற்கின்றனர். இந்தவகையில் செம்மணி மனிதப் புதைகுழிக்கும் சர்வதேச விசாரணையைக் கோரி அனைத்துக் கட்சிகளும் இணைந்து கையெழுத்துப் போராட்டத்தைத் தற்போது முன்னெடுத்து வருகிறது.

இந்த நிலையில் இது தொடர்பாக அனுர கூறுகையில் "வெளிப்படையான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். இதுபோன்ற புதைகுழிகள் நாட்டில் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதே எமது எதிர்பார்ப்பாகும்." இதன் மூலம் அவர் தமிழ் மக்களுக்குச் சொல்லாமல் சொல்லிய செய்தி என்னவெனில் நீங்கள் எவ்வளவு கையெழுத்துச் சேகரித்தால் என்ன, எத்தகைய போராட்டத்தை நடத்தினாலென்ன எல்லா விசாரணைகளும் எமது கண்காணிப்பின் கீழ் உள்நாட்டிலேயே நடைபெறும் என்பதாகும். அதுமட்டுமல்ல, பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கூறுவதுபோல செம்மணி புதைகுழிபற்றி அலட்டிக் கொள்ளத்தேவையில்லை. எங்களை ஆதரித்தால் எதிர்காலத்தில் இதுபோன்று நடக்காது பார்த்துக்கொள்வோம் என்று அனுர சொல்லாமல் சொல்லியுள்ளார். இவ்வாறு கூறும் அநுரகுமாரதான் செம்மணி மனிதப் புதைகுழியின் பிரதான சூத்திரதாரியான பிரகேடியர் சசீந்திர விஜேசிரிவர்த்தனவை (அப்போது லெப்ரினற்) சிறிலங்கா இராணுவத் தலைமையகத்தின் ஒரு முக்கிய பிரிவுக்கு பணிப்பாளராக நியமித்திருக்கிறார். 2000 ஆம் ஆண்டில் செம்மணி புதைகுழி வழக்கில் இன்னும் இருவருடன் இவரும்

> அநுரவின் கச்சதீவுக்கான வருகை. இது அநுரவின் ஓர் அரசியல் ஸ்ரன்ட். தெற்குக்கும் தமிழ் நாட்டுக்கும் ஒரு செய்தியை இதன்மூலம் அநுர சொல்ல விழைந்துள்ளார். நடிகர் விஜய் உட்பட தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் கச்சதீவைப்பற்றிக் கதைப்பது அவர்களுக்கான அரசியல். அநுர கச்சத்தீவுக்குச் சென்றது தெற்குக்கான அரசியல். இதில் வடக்கு மக்களுக்கு எதுவுமில்லை.

சோமரத்ன ராஜபக்ஷேவினால் அடையாளம் காட்டப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டு யாழ்ப்பாண நீதிமன்றினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர். பின்னர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு முடக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலாக குறித்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் சோமரத்ன ராஜபக்ஷ இக்குற்றங்களுடன் தொடர்புடையுடைய உண்மையான குற்றவாளிகளைப் பக்கச் சார்பற்ற விசாரணை நடைபெறுமிடத்து இனங்காட்டத் தயார் எனத் தனது மனைவிமூலம் வெளிப்படுத்தியிருந்தும் அது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்காத சிறிலங்காவின் நீதித்துறையின் வெளிப்படையான விசாரணை பற்றித்தான் அனுர இங்கு குறிப்பிடுகிறார். ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் வைத்துக்கூறிய இந்தக்கருத்து தனியே தமிழ் மக்களுக்கானது மட்டுமல்ல அது சர்வதேச மனித உரிமைப் பேரவைக்கானதும் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அதாவது தனது ஆட்சியின்கீழ் வெளிநாட்டு விசாரணை அல்லது வெளிநாட்டுப் பொறிமுறைகளுடனான விசாரணை என்பவற்றுக்கு இடமில்லை என்பதை அனைவருக்கும் அவர் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

அவர் வடக்கில் எல்லாவிடத்திலும் கூறிய இன்னொரு முக்கிய விடயம், "தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தைக் கையிலெடுத்துள்ளனர்" என்பது. தெற்கில் சில கட்சிகள் இனவாதத்தைக் கையிலெடுக்கின்றன என்று கூறுவதை ஓரளவு ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் வடக்கில்? இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அனுர உட்பட சிங்கள பௌத்த ஆட்சியாளர் அனைவருமே தமிழ் மக்களின் நியாயமான உரிமைக் கோரிக்கைகளை இனவாதமாகவே பார்த்தனர். பார்க்கின்றனர். அதுவும் தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டுள்ள, பேரினவாதத்தில் ஊறிய ஜே.வி.பியின் மூத்த உறுப்பினரான அநுர வடக்கில் இனவாதம் பேசுகின்றனர் எனக்கூறுவதுதான் வேடிக்கை.

இலங்கையின் இன்றைய நிலைக்கான பிரதான காரணமே தங்களின் இந்த மனோநிலைதான் என்பதை அனுரவும் உணரத்தயாராக இல்லை என்பதை அவரின் இக்கூற்று வெளிப்படுத்துகிறது. இதில் அவர்கூறிய தோற்கடிக்கப்பட்ட அரசியல்வாதிகள் (வடக்கில்) என்பதையும் ஆழமாகப் பாரக்கவேண்டும். வடக்கில் தேர்தலில் தோற்றவர்கள், வென்றவர்கள் அனைவருமே தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைத்தானே முன்வைக்கின்றனர். அப்படியானால் இதன்மூலம் அனுர கூறவருவது என்னவெனில் தாங்கள் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரையும் தோற்கடித்து விட்டோம் என்பதும் தற்போது தாங்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதையுமல்லவா?

பாதுகாப்புத் தரப்பினர் கையகப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் அனுர ஒரு கருத்தைக் கூறியிருந்தார். "விடுவிக்கப்படக் கூடிய காணிகளை விடுவிப்போம்" என்பதே அது. விடுவிக்கப்படக் கூடிய காணிகள் என்பதற்கான வரையறைகள் எவை? அதனை யார் தீர்மானிப்பது? அதற்காக தமிழ் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய உயர்மட்டக் குழு ஏதாவது உள்ளதா? உண்மையில் இங்கு பாதுகாப்புத் தரப்பினரின் தீர்மானமே இறுதியானது. அதன் தீர்மானம் எவ்வாறு இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. அதற்கான மிகப்பிந்திய உதாரணம்தான் வன்னியில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட காணிகளை மீண்டும் கையகப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் முயற்சிப்பதான பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் குற்றச்சாட்டும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தீர்மானமும். எனவே தனது கூற்றின் மூலம் அனுர காணி இழந்தவர்க்கு சொல்லாமல் சொல்லிய செய்தி என்னவெனில் நீங்கள் கேட்பதை எல்லாம் நாங்கள் தரமுடியாது. நாங்கள் விடுவதையே நீங்கள் பெறவேண்டும் என்பதாகும். சென்ற இடங்களில் மக்களுக்குக் கைகொடுக்கும், கையில் குழந்தைகளைத் தூக்கிப் படம் காட்டும் அனுர மயிலிட்டியில் தங்கள் காணிகளைப் பறிகொடுத்து இருக்க இடமில்லாமல் அலைந்த மக்களின் குரலைக் கேட்க மனமில்லாது அவர்களைத் துரத்தியடித்ததன்மூலம் தமிழ்மக்களுக்கு அவர் சொல்வது என்ன?

அனுர சொல்லியவற்றின் பின்னால் உள்ள சிலவற்றைப் பார்த்தோம். அவர் சொல்ல மறந்த (விரும்பாத) விடயங்களின் பின்னால் உள்ளவற்றையும் பார்க்கவேண்டும். தமிழ் மக்களின் முக்கிய எதிர்பார்ப்புகளான மாகாண சபைத் தேர்தல், அதற்கான அதிகாரங்கள், புதிய அரசியலமைப்பு போன்ற எவை பற்றியும் அநுர வாய்திறக்கவில்லை. ஆனால் அபிவிருத்தி, ஒற்றுமை பற்றி அதிகம் எடுத்துக் கூறினார். அவ்வப்போது அமைச்சர்கள் சிலர் மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டில் நடக்கும் என்று உச்சரித்தாலும் அதற்கான நோக்கம் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்திருப்பின் அனுர அதைக் கட்டாயம் கூறியிருப்பார். மாகாணசபைத் தேர்தலைப் பழைய முறையில் நடத்துவதற்கான தனிநபர் முன்மொழிவை பாராளுமன்றத்தில் சாணக்கியன் சமர்ப்பித்ததற்கு மேலாக அரசாங்க உறுப்பினர் ஒருவரும் சமர்ப்பித்திருந்தும் அதனை இதுவரை விவாதத்திற்கு எடுக்கவில்லை என்பதுடன் அதற்கு மாறாக எல்லைகள் மீளவரையறை செய்த குழவின் அறிக்கை தற்போது ஆராயப்படுவதாக அண்மையில் பிரதமர் தெரிவித்திருந்தார். அதே வேளை மாகாணசபைகளுக்கான எல்லைகள் பற்றி மீள ஆராய்வதானால் இன்னும் மூன்ற ஆண்டுகளுக்கு அவற்றுக்கான தேர்தல் இடம்பெற வாய்ப்பில்லை என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அண்மையில் கூறியதும் இங்கு கவனிக் கத்தக்கது.

தேசியப் பிரச்சினையான தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை தொடர்பான அநுர தலைமையிலான அரசாங்த்தின் நிலைப்பாடு தெளிவானது. தமிழ் மக்களுக்கு அரசியற் பிரச்சினையென எதுவும் கிடையாது. அவர்களுக்கு இருப்பதெல்லாம் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் மட்டுமே என்பதுதான் அவர்களது சித்தாந்தம். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வருபவர்கள் அவர்கள். அது மட்டுமன்றி உத்தேச புதிய அரசியலமைப்பில் அம்முறைமை இருக்காது என்பதையும் அவர்கள் தெளிவாகவே சொல்லி விட்டார்கள். இந்த நிலையில் மாகாண சபைக்கான தேர்தல், அவற்றுக்கான அதிகாரங்கள், புதி அரசியலமைப்புத் தொடர்பாக அவர் பேச மறந்ததில் ஆச்சரியம் எதவுமிருக்க முடியாது. அபிவிருத்தியைப் பற்றி மட்டுமே பேச முடியும். அதனாற்றான் தனது

(14ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை மிரள வைத்த சீன இராணுவ அணிவகுப்பு:

## அமெரிக்காவை சீற்றமடைய சீன வழிகோலுகிறதா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா





இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பானிய சாம்ராஜ்ஜியம் சரணடைந்த வெற்றியை கொண்டாடும் வகையில், உலகமே கண்வைத்துப் பார்க்கும் அளவுக்கு சீனாவில் பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பு நடந்தது.

மிகப்பெரிய ராணுவ அணிவகுப்பில் இருபத்தாறு உலக நாடுகளின் தலைவர்கள் கண்டுகளித்தனர்.

அமெரிக்காவிற்கு எதிராக சீனா சதி செய்கிறது என்றும், நளிணமாக புட்டின், கிம் ஜாங் ஆகியோருக்கு வாழ்த்துகள் என ஆதங்கத்துடன் ட்ரம்ப் தெரிவித்துள்ளமை, அமெரிக்காவிற்கு எதிரான சக்திகள் உருவெடுப்பதை அடியோடு நிறுத்த முயல்வது வெளிப்படையாக தெரிகிறது.

**ஜப்பானிய சாம்ராஜ்ஜிய சரணடைவு:**

இரண்டாம் உலகப் போர் முடிவின் எண்பதாவது நினைவு தினத்தை முன்னிட்டு செப்டம்பர் மூன்றில் சீனாவில் மிகப்பெரிய ராணுவ அணிவகுப்பு நடந்தது.

இந்த அணிவகுப்பை 26 உலக நாடுகளின் தலைவர்கள் கண்டுகளித்தனர். இதில் மிக முக்கியமான தலைவர்கள் இருவர். ரஷ்ய அதிபர் புட்டின், வட கொரியா அதிபர் கிம் ஜாங் உன்.

இந்த இருவரும் சீன அதிபர் ஜி ஜின்பிங் உடன் இந்த இரு நாட்டு தலைவர்களும் ராணுவ அணிவகுப்பைக் கண்டுகளித்த புகைப்படம் இப்போது இணையத்தில் பெரிதும் கவனிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ஜின்பிங், ஜப்பானின் ஆதிக்கத்திற்கு எதிராக சீனா வெல்வதற்கு காரணமாக இருந்த உலக நாடுகளுக்கு நன்றி தெரிவித்தார்.

**சீனாவின் அணிவகுப்பும் பலமும்:**

சீனா அரசு தனது படை, ஆயுத மற்றும் ராணுவ பலத்தைக் காட்ட புதிய தலைமுறை ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள், போர் விமானங்கள், ஆரம்ப எச்சரிக்கை விமானங்கள் மற்றும் விமான நெரிசல் அமைப்புகள் ஆகிய அதிநவீன ஆயுதங்களை முக்கியமாக காட்சிப்படுத்தியது.


ஆனாலும் ஜின்பிங் தனது பேச்சில் அமெரிக்க நாட்டின் பெயரைக் குறிப்பிடவில்லை. இது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்தப் போரின் முடிவிற்கு அமெரிக்கா முக்கிய பங்காற்றியுள்ளது.

ஜின்பிங் அமெரிக்காவின் பங்களிப்பைக் குறிப்பிடாததை அடுத்து, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில், 'சீனா விடுதலைப் பெற, அமெரிக்கா அதற்கு தந்த மிகப்பெரிய அளவிலான ஆதரவையும், அமெரிக்கா சிந்திய ரத்தத்தையும் சீன அதிபர் ஜி குறிப்பிடுவில்லை என்று பெரிய கேள்வியை எழுப்பியதுடன சீனா பதில் அளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஜப்பானியர்களை எதிர்த்து சீனாவின் வெற்றிக்காக பல அமெரிக்கர்கள் இறந்துள்ளனர். அவர்களின் வீரம் மற்றும் தியாகம் சரியாக கௌரவிக்கப்படும், நினைவுகூரப்படும் என்று நான் நம்புகிறேன். சீன அதிபர் ஜி மற்றும் சீனாவின் மக்கள் சிறந்த தினத்தை கொண்டாடட்டும்.

நீங்கள் அமெரிக்காவிற்கு எதிராக சதி செய்யும் போது, விளாடிமிர் புதின் மற்றும் கிம் ஜாங் உனக்கு எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவிக்கவும்" என்று பதிவிட்டுள்ளார்.

இந்தப் பதிவில் கோபமும், மிரட்டலும் இரண்டும்



கலந்திருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.

**சீன - ரஷ்ய உறவு:**

அலாஸ்காவில் கடந்த ஆகஸ்ட் 15-ம் தேதி, அமெரிக்கா சென்றிருந்த புட்டின், ட்ரம்ப் உடனான சந்திப்பு முடிந்த அடுத்த சில மணி நேரங்களில் ரஷ்யாவிற்கு கிளம்பிவிட்டார்.

ஆனால், சீனாவில் இப்போது புட்டின் மூன்று நாள்களாக இருக்கிறார்.

அத்துடன் சீனாவில் இந்திய பிரதமர் மோடி உடன் அதிக நட்புடன் இருந்தார் புதின். இதேவேளை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி உடனான அமைதி பேச்சுவார்த்தைப் பற்றி இன்னமும் வாயைத் திறக்கவில்லை அவர்.

**மோடி - புட்டின் - ஜின்பிங் முத்தரப்பு:**

மோடி, புட்டின், ஜின்பிங் தலைவர்களின் இந்தியா, ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளும் ஒற்றுமையாக இருப்பதை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் மூன்று நாட்டு தலைவர்களும் வலுவாக தெரிவித்திருந்தனர்.

இவை அனைத்தும் நிச்சயம் ட்ரம்பிற்கு கடுங் கோபத்தை ஏற்படுத்தியது என்பது உண்மைதான். இருப்பினும் அமெரிக்காவின் பெயரை தனது உரையில் ஜின்பிங் குறிப்பிடவில்லை என்பது மற்றொரு முக்கியமான குற்றச்சாட்டாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

**ராணுவ அணிவகுப்பில் மோடி இல்லை!**

ஷாங்காய் மாநாட்டின்போது இந்திய பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் புட்டின் இடையே நல்ல நெருக்கம் காணப்பட்டது.

இந்த மாநாட்டின்போது பிரதமர் மோதி, ஷி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புதின் இடையே இருந்த நெருக்கம் அமெரிக்காவிற்கே அச்சத்தை ஏற்படுத்தியது.

ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 1ஆம் வரை நடந்த ஷாங்காய் மாநாட்டில், பத்து உறுப்பு நாடுகளின் உறுப்பினர்கள் தவிர கூட்டணி நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர். ஆனாலும் பிரதமர் மோடி சீனாவில் நடந்த ராணுவ அணிவகுப்பில் பங்கேற்கவில்லை.

இரண்டாவது உலகப் போரில் பாசிசத்துக்கு எதிரான சீனாவின் இந்த அணிவகுப்பு ஜப்பானின் ஆதிக்கத்துக்கு எதிரானது. அதனால் இந்த அணிவகுப்பில் பங்கேற்று ஜப்பானுக்கு எந்த செய்தியும் சொல்ல இந்தியா விரும்பவில்லை. இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குதான் எதிரானதே தவிர ஜப்பானுக்கு அல்ல என்றும் இந்திய தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் இந்த அணிவகுப்பில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், பிரதமர் மோடி பங்கேற்கவில்லை என்பது இருதரப்புடனும் நல்லுறவை பேண முயல்வது தெளிவாகிறது.

**ஷாங்காய் உச்சி மாநாடு:**

இந்த பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பின் முன்னராக, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரச தலைவர்கள் குழுவின் 25வது உச்சி மாநாடு சீன ஜனா



திபதியின் தலைமையில் நடைபெற்றது. இதன் முடிவில் ரஷ்ய -இந்திய - சீன முத்தரப்பு கூட்டணி உருவானது, அமெரிக்காவிற்கு இது பெருஞ் சவாலாக எழுந்துள்ளது என்றும் விசனிக்கப்பட்டது.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உலகின் மிகப்பெரிய பிராந்திய அமைப்பாகும். இதில் தற்போது 26 நாடுகள் அடங்கும். அதன் மொத்த பொருளாதார உற்பத்தி 30 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை நெருங்குகிறது. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரச தலைவர்கள் குழுவின் 25வது உச்சி மாநாடு சீன ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின் தியான்ஜின் நகரில் 2025, ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 1-ம் தேதி வரை நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 25-வது உச்சி மாநாடு நடைபெற்றது.

இது சீனாவின் தியான்ஜினில் உள்ள மெய்ஜியாங் மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. இந்த உச்சிமாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உட்பட பல நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**சீனாவின் பொருளாதார வளர்ச்சி நோக்கம்:**

இவ்உச்சி மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கடந்த 24 ஆண்டுகளில் இந்த அமைப்பு பல வெற்றிகளைப் பெற்றுள்ளது என்று கூறினார். மாறிவரும் உலகத்தை எதிர்கொள்ளும் வகையில் அனைத்து உறுப்பு நாடுகளும் அமைப்பின் இலக்குகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத் தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார வளர்ச் சியை உறுதி செய்வதற்காக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மேம்பாட்டு வங்கியை விரைவில் நிறுவ வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரஸ்பர நன்மைகள் மற்றும் பொதுவான சாதனைகள் பொதுவான அடிப்படையில், திறந்த தன்மை மற்றும் பங்கேற்பு, நியாயம் மற்றும் நீதி, நடைமுறைவாதம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத் தினார். ●


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையால் மட்டுமே கிராம எழுச்சி சாத்தியம்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்.07

யாழ். கல்லுண்டாய் குடியேற்றக் கிராமமும் பிற கிராமங்களைப்போன்று அனைத்து வசதிகளையும் பெற்று முன்னேறிய - எழுச்சியுற்ற கிராமமாக மாற வேண்டும் என்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தினார்.

சி. தர்மகுலசிங்கம் மற்றும் அ. யோகராஜா ஆகியோரின் அனுசரணையுடன் சிறுவர் வறுமை நிவாரண நிதியின் ஊடாக கட்டப்பட்ட கல்லுண்டாய் ஐக்கிய சனசமூக நிலையக் கட்டடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆளுநர் மேலும் உரையாற்றியபோது, "யாழ். மாவட்டச் செயலராக இருந்த காலத்தில், காணிகள் இல்லாத மக்களை அழைத்து கலந்துரையாடி, ஒரு தொகுதியினரை நாவற்குழியிலும் மற்றவர்களை கல்லுண்டாயிலும் குடியேற்றினோம். அப்போது மேலதிக மாவட்டச் செயலர் சு. முரளிதரனும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யசோதாவும் முழு ஒத்துழைப்பு வழங்கினர். அமைச்சின் செயலராக இருந்த சிவஞானசோதி ஊடாக நிதிகளைப் பெற்று இப்பணியை முன்னெடுத்தோம். துரதிர்ஷ்டவசமாக நான் ஓய்வு பெற்றமையால் தொடர்ந்து உதவ இயலவில்லை.

ஒவ்வொரு மழைக்காலத்திலும் இப்பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை உள்ளது.

வீதிகள் திருத்தப்பட வேண்டும், மண் நிரப்பு செய்யப்பட வேண்டும்.

சிலருக்கு காணி உரிமையும் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இவற்றை தற்போதைய பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தி பொறுப்பேற்று, ஆளுநருடன் இணைந்து செயல்படுத்துவார். இந்தக் கிராம மக்கள் சிறப்பான வாழ்க்கையை வாழ்வதே எமது எதிர்பார்ப்பு அதனை நிறைவேற்றுவோம்" - என்றும் ஆளுநர் உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளரும் கலந்துகொண்டனர். (எ)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி இந்தியாவிலிருந்து வந்தது விடுதலை நீர்!

யாழ்ப்பாணம், செப். 07

சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, வடக்கு - கிழக்கு பகுதிகளில் விடுதலை நீர் சேகரிக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடந்த நாட்களில் விடுதலை நீர் சேகரிக்கப்பட்டது. மேலும், இந்த வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு புலம்பெயர் தேசங்களில் இருந்தும் விடுதலை நீர் சேகரிப்பு இடம்பெற்று வருகிறது.

அதனடிப்படையில், நேற்று முன்தினம் காசி உட்பட இந்தியாவின் பல தீர்த்தங்களில் இருந்து புனித நீர் எடுத்து வரப்பட்டு விடுதலை நீர் சேகரிப்பு பானையில் சேமிக்கப்பட்டது. இந்த நீர் சேகரிப்பு நிகழ்வானது சிவகுரு ஆதீனத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த விடுதலை நீர் சேகரிப்பு நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டோரது சங்கத்தினர், அரசியல் கைதிகளின் உறவுகள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், தென்னிந்தியவில் இருந்து வருகை தந்த உறவுகள், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# எல்ல விபத்தில் காயமடைந்தோருக்கு உதவிய வெளிநாட்டு சுற்றுலாவிகள்

கொழும்பு, செப். 07

எல்ல - வெல்லவாய பகுதியில் கடந்த வியாழக்கிழமை பேருந்து விபத்துக்கு உள்ளானபோது, காயமடைந்தவர்களுக்கும் மீட்பு பணிகளுக்கும் பெருமளவு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் உதவியிருந்தனர்.

இந்த விபத்தில் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. இதில், 15 பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

விபத்தையடுத்து, அந்தப் பகுதியில் நின்றிருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் விரைந்து செயல்பட்டு காயமடைந்தவர்களுக்கு முதலுதவி வழங்கினர். அத்துடன், அவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தவும் - மருத்துவமனையில் சேர்ப்பிக்கவும் உதவினர்.

அத்துடன், வெளிநாடுகளில் மருத்துவ சேவையை சேர்ந்த சுற்றுலா பயணிகள் மருத்துவர்களுக்கும் உதவினர் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ

## நால்வர் காயம்

கொழும்பு, செப். 07

சுமார் 50 அடி பள்ளத்தில் ஓட்டோ கவிழந்த விபத்தில் அதில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் காயமடைந்தனர்.

நுவரெலியா - வட்டவளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கம்பளையிலிருந்து ஹற்றனுக்கு சென்ற ஓட்டோவே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. இதில், ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை, தாய் மற்றும் இரு பிள்ளைகள் பயணித்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் காயமடைந்த நிலையில் வட்டவளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நீர்கொழும்பில் துப்பாக்கிச் சூடு

நீர்கொழும்பு, செப். 07

நீர்கொழும்பு குட்டுதுவ பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

நேற்று அதிகாலை 01: 38 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

எனினும், ,ந்தத் துப்பாக்கிச் சூட்டில் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை.

பணத் தகராறு காரணமாக ,ந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)

# அநுரவின் வருகையும்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக் குக்கான வருகையின்போது அதனை முதன்மைப்படுத்தியிருந்தார். அதன் ஒரு அங்கம்தான் மண்டைதீவில் யாழ்ப்பாண சர்வதேச விளையாட்டுத் திடலுக்கான அடிக்கல். வரவேற்கக் கூடிய விடயம் தான். ஆனால் இத்திட்டத்துக்கான நிதியை அரசாங்கமோ அன்றி இலங்கைக் கிரிக்கட் சபையோ ஒதுக்க வில்லை. இலங்கைக் கிரிக்கட் சபை சார்பில் அப்போதைய அதன் தலைவர் சனத் ஜெயசூரியா அதற்கான நிதியுத வியை இந்தியாவிடம் கேட்டதற்கும் இதுவரை முடிவில்லை. அப்படியிருக்க அவர்கள் கூறுவதுபோல இன்னும் மூன்று மாதமே எஞ்சியுள்ள இவ்வாண்டின் இறுதியில் இத்திடலில் போட்டி கள் எப்படி நடக்கும் என்று புரிய வில்லை. அதேபோல மயிலிட்டி இறங்கு துறை யில் தரித்து நிற்கும் பெரும்பா லான கலங்கள் சிங்கள மீனவருடையது. அனுர நினைக்கும் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. அதாவது தமிழ் மக்களாகிய நீங்கள் அபிவிருத்தியை வரவேற்றாலும் அரசியல் உரிமைக்கே முலிடம் கொடுப்பீர்கள். ஆனால் நாங்கள் அபிவிருத்தி பற்றி மட்டுமே பேசுவோம் என்பதே அது.

அடுத்த விடயம் அனுரவின் கச்சதீவுக் கான வருகை. இது அநுரவின் ஒரு அரசியல் ஸரண்ட். தெற்குக்கும் தமிழ் நாட்டுக்கும் ஒரு செய்தியை இதன்மூலம் அநுர சொல்ல விழைந்துள்ளார். நடிகர் விஜய் உட்பட தமிழ் நாட்டு அரசியல் தலை வர்கள் கச்சதீவைப்பற்றிக் கதைப்பது அவர்களுக்கான அரசியல். அநுனுர கச்சத்தீவுக்குச் சென்றது தெற்குக்கான அரசியல். இதில் வடக்கு மக்களுக்கு எதுவுமில்லை. உண்மையில் கச்சத்தீவு தொடர்பான இருநாட்டுப் பிரச்சினை நிலவுரிமை பற்றியதல்ல. கடல்வளப் பயன்பாடும் அதற்கான முறைகளும் பற்றியது. சில விட்டுக் கொடுப்புகளுட னான பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கக் கூடிய வாய்ப்பிருந்தும் இந்திய ஒன்றிய அரசும் இலங்கை அரசும் அதில் அதிக அக்கறை காட்டுவதைத் தவிர்ப்பதற்கான பிரதான காரணம் இருநாட்டுத் தமிழர்களும் ஒன்றுபடக் கூடாது என்ற அரசியல் நோக்கந்தான். ஒட்டு மொத்தத்தில் வெளிப்படுவது அநுரவிடமிருந்தும் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதுவும் அதை உணர்ந்து தமிழ்மக்களுக்கான அரசிய லைச் செய்யும் நிலையில் தமிழ் அரசியல் தலைவர்களும் இல்லை என்பதுந்தான்.

# புதுடில்லிக்கும் தமிழ்நாட்டுக்கும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாக்கில் வீழ்ச்சி ஏற்படலாம் என்று அஞ்சுவதாக கூறப்படுகின்ற சீமான் இனத்துவ உணர்ச்சிகளை தூண்டிவிடுவதற்கு மேலும் தீவிரமான கருத்துக்களையும் கோரிக்கைகளையும் முன்வைக்க வேண்டிய அரசியல் நிர்ப்பந்தம் இருப்பதாக தெரிகிறது.

வழமையாக தமிழ்நாட்டு மாநிலக் கட்சிகளே கச்சதீவுப் பிரச்சினையை தேர்தல் காலங்களில் கிளறுவதை வழக்கமாகக் கொண்டிருந்த போக்கில் இருந்து 2024 லோக்சபா தேர்தல் பிரசாரங்கள் வேறுபட்டவையாக அமைந்திருந்தன. பிரதமர் மோடியும் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் கூட கச்கதீவுப் பிரச்சினை கையிலெடுத்தனர்.

இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகவும் கருணாநிதி தமிழ்நாட்டு முதலமைச்சராகவும் இருந்த காலப்பகுதியிலேயே தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதிக்காமல் கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுக்கும் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது என்பதை சுட்டிக்காட்டிய மோடியும் ஜெய்சங்கரும் தமிழ்நாட்டு மீனவர்கள் பாக்குநீரிணையில் அனுபவிக்கும் துன்பங்களுக்கு காங்கிரஸும் திராவிட முன்னேற்றக் கழகமுமே முக்கிய காரணம் என்று மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் மேடைகளில் பேசினர். மீனவர் சமூகத்தின் வாக்குகளைப் பெறுவதற்காக மேற்கொண்ட அத்தகைய பிரசாரத்தின் மூலமாக அவர்கள் இருவரினாலும் எதையும் சாதிக்க முடியவில்லை. கரையோரப் பிராந்தியங்களில் கூட பாரதிய ஜனதாவினால் வாக்குகளை அதிகரிக்க முடியவில்லை.

கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்த பிறகு கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் உடன்படிக்கை தொடர்பில் பிரச்சினை கிளப்பிய முதல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியே என்பது குறிப்பிடத்தக்கது. லோக்சபா தேர்தல் முடிந்த பிறகு அவர் கச்சதீவை மறந்து விட்டார்.

காங்கிரஸுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் எதிரான பிரசாரத்துக்காக கச்சதீவு உடன்படிக்கையை பற்றி மோடியும் ஜெய்சங்கரும் பேசினார்களே தவிர, அந்த தீவை மீட்டெடுப்பது குறித்து பேசவில்லை. அடுத்த வருடம் ஏப்ரில் - மே மாதங்களில் நடைபெறவிருப்பதாக எதிர்பார்க்கப்படும் தமிழ்நாட்டு சட்டசபை தேர்தலில் மீண்டும் மோடி கச்சதீவு விவகாரத்தைப் பயன்படுத்தவும் கூடும். மற்றைய கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக கச்சதீவு மீட்புக் கோரிக்கையை பிரசாரங்களில் முக்கியத்துவப்படுத்தக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

ஜனாதிபதி திசநாயக்கவின் கச்சதீவு விஜயம் மீண்டும் இலங்கை கடற்படையின் தாக்குதல்கள் தீவிரமடையக் கூடும் என்ற அச்சத்தை தமிழ்நாட்டின் இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் நாகபட்டினம் மாவட்டங்களின் மீனவர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருப்பதாக சில இந்தியப் பத்திரிகைகள் செய்தவெளியிட்டிருக்கின்றன. திசநாயக்கவின் விஜயத்தை இலங்கை கடற்படையினர் கச்சதீவுக்கு அண்மையாக மீன்பிடிக்கும் மீனவர்கள் மீது தாக்குதலை நடத்துவதற்கான 'இலவச அனுமதியாக" கருதாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்வதற்கு கொழும்புடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று மீனவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக டெக்கான் ஹெரால்ட் செவ்வாயன்று செய்தி வெளியிட்டிருந்தது.

திசநாயக்கவின் விஜயம் கச்சதீவை மீட்கவேணடும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கைக்கு நேரடியான ஒரு சவாலே தவிர வேறு ஒன்றுமில்லை என்று தமிழ்நாடு படகு மீனவர்கள் சங்கத்தின் தலைவர் என்.ஜே. போஸ் கூறியதாக அந்த செய்தியில் கூறப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் விஜயம் தொடர்பில் இந்திய அரசாங்கம் எத்தகைய வியாக்கியானத்தை செய்யும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 மணி...

துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

இதைத் தொடர்ந்து, கொழும்பு - மருதானை - பஞ்சிகாவத்தையில் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் செந்தில் மோகன் (வயது 44) என்பவர் படுகாயமடைந்தார். இவர் பாதாள உலகக் குழுவை சேர்ந்தவர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேபோன்று, நேற்று அதிகாலை 1.30 மணியளவில் நீர்கொழும்பு குட்டிதுவ பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீடு ஒன்றின்மீது 9 மி. மீ. துப்பாக்கியால் ஒரு முறை மட்டும் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதில், எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

நேற்று காலை 9.45 மணியளவில் களுத்துறை - பாணந்துறை - அலுபோமுல்லை பகுதியில் விற்பனை நிலையம் ஒன்றிலிருந்த பெண்ணை குறி வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதிலும் எவரும் பாதிக்கப்படவில்லை.

இதேசமயம், இந்த ஆண்டில் நாட்டில் 96 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 50 பேர் உயிரிழந்தர். 53 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பக்கச்சார்பற்ற...

கூறினார்.

மேலும், " போதைப்பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சிறீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளது. குறித்த நபர் கடந்த காலங்களில் பல்வேறு கட்சிகளுடனும் இணைந்து செயல்பட்டுள்ளார். இவ்வாறான குற்றச்சாட்டுக்கு உள்ளான பலர் கடந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கும் ஆதரவளித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் மொட்டு கட்சியினரை தொடர்புபடுத்தி பேசும் அரசாங்கம் ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய இப்ராஹிம் தொடர்பில் எந்த வகையான நடவடிக்கையை எடுத்துள்ளது? பயங்கரவாதிகளின் பணத்தில் அரசியல் செய்யும் அரசாங்கம் தற்போது ஓர் உறுப்பினரின் பிரச்னையை கொண்டு பொதுஜன பெரமுனமீது சேறுபூச முயல்கிறது.

ஆயுதங்கள் அடங்கிய கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டன என்று பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கூறியிருந்தார். போதைப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான பொருட்கள் இந்தக் கொள்கலன்களின் கொண்டு வரப்பட்டிருக்கும் நிலையில் சில நேரம் அர்ச்சுனா கூறிய விடயங்களும் உண்மையாக இருக்க வாய்ப்புள்ளது.

இந்த கொள்கலன்கள் குறித்த வெளிநாடுகளிலிருந்து எந்தவித புலனாய்வு அறிக்கைகளும் கிடைக்கவில்லையா அல்லது வந்த அறிக்கைகளை புறக்கணித்து அரசாங்கம் கொள்கலன்களை வெளியேற்றியதா என்பதை பொலிஸ் மா அதிபர் கூற வேண்டும்.

எங்களது கைகளில் இரத்தம் படியவில்லை. எந்தவித சட்டவிரோத செயல்பாடுகளிலும் நாம் ஈடுபடவில்லை. இயலாமையை மூடிமறைக்க பொதுஜன பெரமுனமீது அரசாங்கம் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறது. கடந்த காலங்களில் எமில் காந்தன் என்ற நபருடன் நான் இருந்ததைப்போல ஒரு படத்தை காண்பித்து என்னையும் விடுதலைப் புலியாகக் காட்டும் முயற்சிகளும் இடம்பெற்றன.

ஆட்சியில் இல்லாதபோது பொய் கூறிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் பொய்களையே கூறுகிறது. பிரதியமைச்சர் சுனில் வட்டகலவின் செயல்பாடுகளும் கவலையளிக்கின்றன. எனவே, இந்த விடயத்தை அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படுத்தாமல் அரசாங்கம் பக்கசார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்க ஆவன செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

## போதை...

ஆகியோருடன் சில நபர்கள் இருக்கும் தனித்தனி புகைப்படங்கள் காணப்பட்டன.

இந்த புகைப்படங்களில் அரசியல் பிரமுகர்களுடன் இருப்பவர்கள் தற்போது சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ள இரண்டு போதைப்பொருள் கொள்கலன்களின் உரிமையாளர்கள். இவ்வாறான அரசியல்வாதிகளே போதைப்பொருள் விநியோக சங்கிலியின் பின்னால் இருந்து செயல்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் சிலர் பட்ட மேற்படிப்புக்காக வெளிநாடு செல்கின்றனர். இன்னும் சில காலங்களில் மேலும் சிலர் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்படும் என்று நினைக்கிறேன். எவராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை உச்ச பயனுள்ளதாக பயன்படுத்துவோம் - என்றார். (ஐ)

## 2ஆம் கட்ட...

கண்டறியப்பட்டன. இதில், 239 எலும்புக்கூடுகள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டன. அவை நீதிமன்ற கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளன. புதை குழியில் கண்டறியப்பட்ட எலும்புக் கூடுகளில் ஆண்கள், பெண்கள், சிறுவர் கள் மற்றும் குழந்தைகள் வரையானவர்களின் எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

அத்துடன், இந்தப் புதைகுழியில் குவியல்களாகவும் எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், 72இற்கும் மேற்பட்ட சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அடுத்த கட்டம்**

இந்த நிலையில், புதைகுழி தொடர்பான வழக்கு எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. செலவின அறிக்கை, இடைக்கால நிபுணர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அடுத்த கட்ட அகழ்வு குறித்து தீர்மானிக்கப்படும் என்று அறிய வருகிறது.

**பின்னணி**

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் செம்மணி பகுதியில் முகாம் அமைக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு மாணவி கிருஷாந்தி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார். அவரை தேடிச் சென்ற குடும்பத்தினர், அயலவர் என நால்வர் கொல்லப்பட்டனர். இது தொடர்பான வழக்கில் 6 இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனை பெற்றவர்களில் ஒருவரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியில் 300 முதல் 400 பேர் வரையானோர் கொன்று புதைக்கப்பட்டனர் என்று கூறினார். 1999ஆம் ஆண்டு செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் 15 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இந்த அகழ்வு பணி நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், செம்மணியின் தொடர் நிலமாக உள்ள அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி மின் தகன மேடை அமைப்பதற்காக அத்திபாரம் வெட்டப்பட்டபோது மனித எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டன. பரிசோதனைகளில் அவை மனித எலும்புக்கூடுகள் என்று உறுதிப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து அந்த இடத்தை அகழ்வதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மே 15 ஆம் திகதி ஆரம்பமான முதல் கட்ட அகழ்வு பணிகள் 9 நாட்கள் தொடர்ந்திருந்தன. இதன்போது, 19 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு - மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து, இரண்டாம் கட்ட அகழ்வு கடந்த ஜூன் 26ஆம் திகதி ஆரம்பமாகி நேற்றுடன் நிறைவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெளிவிவகார அமைச்சர் இன்று ஜெனிவா பயணம்

கொழும்பு, செப். 07

ஐ. நா. மனித மனித உரிமைகள் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஜெனிவாவுக்கு விமானம் மூலம் பயணமாகிறார்.

அமைச்சருடன் ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட பிரதிநிதி தயானி மெண்டிஸூம் செல்லவுள்ளார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதில், மதியம் ஒரு மணியளவில் வெளிவிவகார அமைச்சர் உரையாற்றுவார் என்றும் தெரிய வருகிறது. (ஐ)

# அபிவிருத்தி திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றுக

## ஜனாதிபதி அநுர குமார



கொழும்பு, செப். 07

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவு செய்யத் தவறியதாலும் அவற்றின் திட்ட காலங்களை நீடித்து - மதிப்பிடப்பட்ட செலவை அதிகரித்ததால், அந்த திட்டங்களின் நன்மைகளையும் முதலீடு செய்த நிதியின் பிரதிபலன்களையும் நாடு இழந்துள்ளது. இந்த ஆண்டுமுதல் ஆரம்பிக்கப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் உரிய நேரத்தில் நிறைவு செய்ய வேண்டும்", என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், "மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் ஏற்படும் தாமதங்களைத் தடுத்து அவற்றின் நன்மைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மக்களுக்கு வழங்குவது மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகளின் பொறுப்பாகும். ஓர் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும்போது அது நிறைவடையும் வரை இலக்குமயப்பட்ட திட்டத்தை அவர்கள் வைத்திருக்க வேண்டும்", என்றும் கூறினார்.

மொனராகலை மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை நடந்த மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மக்களுக்கு அவசியமான அபி விருத்தித் திட்டங்களுக்கு எந்த நேரத்திலும் நிதி ஒதுக்கத் தயாராக இருக்கிறது. திறைசேரியின் நிதி கிராமங்களுக்குச் செல்ல வேண்டுமாயின் கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## மன்னாரில்...

ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பு கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது. வழக்கு தொடுநர் தரப்பில் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன், சிவஸ்கந்தசிறீ ஆகியோர் வழக்கை நெறிப்படுத்தியிருந்தனர். (ஐ)

## அரசை...

அவர் நேற்று வெளியிட்ட சிறப்பு காணொலியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 'பை தக்சலாவ' என்ற யூரியூப் சனலை நடத்தும் ராஜ் வீரரத்ன, மிலிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வீடுகளுக்கு அருகில் இலக்கத் தகடுகள் இல்லாத மோட்டார் சைக்கிள்களில் பலர் வந்து செல்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், பொதுமக்கள், ஊடகத்துறையினர், சமூக ஊடக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் பாதுகாப்பின்மை உணர்வு நிலவுகிறது. தற்போதைய அரசாங்கம் கடந்த தேர்தல் மேடையில் தேசிய பாதுகாப்பு குறித்து மேலதிக கல்வியை நடத்துவோம் என்று கூறியது. அவ்வாறு கூறிய இந்த கட்சி நாட்டை பொறுப்பேற்றுள்ள நேரத்தில் இந்தக் கொலை கலாசாரம் பரவியுள்ளது .

ஊடகவியலாளர்களுக்கு எதிரான இத்தகைய அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்துக்கு ஒரு மரண அடி. இதை உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இலக்கங்கள் அறியப்படாத மோட்டார் சைக்கிள்களின் ஓட்டுநர்கள் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டும். அத்துடன், அனைத்து குடிமக்களுக்கும் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் சரியான விடயங்களைப் பாராட்டவும் தவறான விடயங்களை விமர்சிக்கவும் உரிமை உண்டு.

சமூகத்தை அச்சுறுத்தும் இந்தக் கொலை கலாசாரத்தைத் தோற்கடிக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முடிந்தளவு அதிகபட்ச ஒத்துழைப்புகளை வழங்குவோம் - என்றார். (ஐ)

## கிருஷாந்தி...

தேடிச் சென்ற தாய், தம்பி, அயலவரும் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து அவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. இது தொடர்பான வழக்கில் 6 இராணுவத்தினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், இந்த வழக்கில் இராணுவ உயரதிகாரிகள் பலர் தப்பிவிட்டனர் என்ற குற்றச்சாட்டு இன்றளவும் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மனித...

நல்லிணக்க முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்கும்.

"மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடனும் அதன் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடனும் இலங்கை நெருக்கமான ஒத்துழைப்பை பேணி வருகிறது. இதனால், இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும் சமநிலையுடனும் அமைய வேண்டும்", என்றும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள், தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் குறித்தும் அந்த அறிக்கை விவரித்துள்ளது.

முன்னதாக, இராணுவம் மற்றும் படையினரின் மோசமான மனித உரிமைகள் மீறலை இலங்கை அரசு ஒப்புக் கொள்ளத் தவறிவிட்டது. இலங்கை ரோம் சட்டத்தில் கையெழுத் திட வேண்டும் என்றும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வலியுறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## காற்றாலைக்கு எதிரான போராட்டம் தமிழ் அரசு கட்சியினர் பங்கேற்பு!

மன்னார், செப். 07

காற்றாலை மின் கோபுரம், கனிய மணல் அகழ்வு என்பவற்றுக்கு எதிராக மன்னாரில் நேற்று 36ஆவது நாளாகவும் போராட்டம் நடைபெற்றது. சுழற்சி முறையில் நடத்தப்படும் இந்தப் போராட்டத்தில் நேற்றைய தினம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளை பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ள் பங்கேற்றனர்.

மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

நேற்றைய போராட்டத்தில், "காற்றாலை எம் கண்ணீரின் கதை சொல்லும்", "நாட்டை விற்று அபிவிருத்தி எதற்கு", "அரசே எமது உயிரோடு விளையாடதே", "காற்றாலை அமைத்து எமது குல கருவறுக்காதே", "சொந்த மண்ணிலே அகதியாகும் நிலை வேண்டாம்", என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன், கோஷங்களையும் எழுப்பினர். (ஐ)

## கச்சதீவை இந்தியாவுக்கு வழங்க வேண்டியதில்லை

கொழும்பு, செப். 07

கச்சதீவை இந்தியாவுக்கு வழங்கவேண்டிய அவசியம் இலங்கைக்கு இல்லை என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீட சிரேஷ்ட விரிவுரையாளர், சட்டத்தரணி எம். ஏ. எம். ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இறைமையின் பிரகாரம் கச்சதீவு விவகாரம் முடிவடைந்து விட்டது, இதனை இந்திய மீள கேட்க முடியாது என்று அவர் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

கச்சதீவினுடைய முழுமையான அதிகாரம், பாதுகாப்பு என்ற அனைத்துமே இலங்கையிடமே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ஜே.வி.பியின் செயல்பாடுகளே பொலிஸ் ஆயுதம் ஏந்த காரணம்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, செப். 07

ஆரம்ப காலங்களில் மிகவும் அமைதியான முறையில் செயல்பட்டிருந்த பொலிஸார் ஜே. வி. பியின் செயல்பாடுகள் காரணமாகவே கடும்போக்காளர்களாக மாற்றப்பட்டனர் - ஆயுதம் ஏந்தினர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். அந்தக் கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், அன்புடன் மக்களால் விளிக்கப்பட்ட பொலிஸார் பிற்காலத்தில் மரியாதைக்கு உரித்தற்றவர்களாக பார்க்கப்பட்டனர் என்று ஜனாதிபதி, பொலிஸ் தினத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆரம்ப காலங்களில் பொலிஸார் அமைதியை காக்கும் அதிகாரிகளாக அறியப்பட்டனர். அவர்கள் ஆயுதமேந்திய படையினராக இருக்கவில்லை.

சிறிய பிரச்னைகளை தீர்ப்பதற்கே பொலிஸ் துறை நிறுவப்பட்டது. எனினும், அவர்களை ஜே. வி. பியினரே கடும்போக்காளர்களாக மாற்றினர். 71 கிளர்ச்சியில் ஜே. வி. பியினர் பொலிஸாரை கொலை செய்தனர். இதேபோல 88, 89 கலவரங்களில் பொலிஸாரையும் அவர்களின் குடும்பத்தினரையும் ஜே. வி. பியினர் கொன்று குவித்தனர்.

பொலிஸாருக்கு எதிராக ஜே. வி. பியினர் வன்முறையை கட்டவிழ்த்துவிட்டனர். அதன்பின்னரே பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். தடிகளை மாத்திரம் கொண்டிருந்த பொலிஸாரை ஆயுதங்களை ஏந்தும் சூழலை ஜே. வி. பியினரே உருவாக்கினர்.

ஜே. வி. பியின் வன்முறையை இல்லாமல் செய்யவே பொலிஸார் வன்முறையை கையில் எடுத்தனர். எனவே, பொலிஸார் வன்முறையை கையில் எடுத்தமைக்கு பொலிஸாரை குற்றம் சுமத்த எவருக்கும் உரிமை இல்லை - என்றார். (ஐ)

# திகன கலவரம் குறித்த அறிக்கை 7 ஆண்டுகளின் பின் வெளியானது

கொழும்பு, செப். 07

**கண்டி மாவட்டத்தின் திகன மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த காலங்களில் நடந்த வன்முறை சம்பவங்கள் குறித்த விசாரணை அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு வெளியிட்டுள்ளது.**

வன்முறை சம்பவங்கள் நடந்து 7 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. 2018 மார்ச்சில் நடந்த இந்தத் தொடர் வன்முறை சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை தற்போது ஆங்கிலத்தில் மட்டும் கடந்த முதலாம் திகதி வெளியானது.

திகனவில் நடந்தவை போன்ற தாக்குதல்கள் இதற்கு முன்பு 2014 இல் அளுத்கமவிலும் 2017 இல் ஜின்தோட்ட மற்றும் 2018 இல் அம்பாறை ஆகிய இடங்களிலும் நடந்துள்ளன. இதேவேளை இந்த அறிக்கை 9 அமைச்சுகளுக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

மேலதிகமாக, அரசாங்கம் செயல்படுத்த வேண்டிய 6 பிற பரிந்துரைகளையும் இந்த அறிக்கையில் மனித உரிமைகள் ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்களுக்குப் பொறுப்பான தொடர்புடைய அமைச்சுகள், ஒன்லைன் வெறுப்புப் பேச்சு மற்றும் தூண்டுதல் மேலும் பரவுவதைத் திறம்படக் கண்காணித்துத் தடுக்க வேண்டிய வழிமுறைகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளன.

முஸ்லிம்களை நோக்கிய வெறுப்புப் பேச்சுகளின் அதிர்வெண் குறைந்துள்ள நிலையில், பெண்கள் மற்றும் மக்களை நோக்கி அவர்களின் பாலினம் அல்லது பாலியல் நோக்குநிலையின் அடிப்படையில் வெறுப்பு பேச்சு உட்படப் பிற வகையான வெறுப்பு பேச்சுகள் அதிகரித்துள்ளன என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு நிகழ்ச்சி நிரலை செயல்படுத்தும் அமைச்சுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளில் இன வன்முறையாக மாறக்கூடிய சூழ்நிலைகளை உன்னிப்பாகக் கண்காணித்து தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கும் திறனை அது வளர்க்க வேண்டும். இன வன்முறையின் பேரழிவு விளைவுகளுக்கு உணர்திறன் கொண்ட விரைவான பதில்களுடன் வலுவான புலனாய்வு சேகரிப்பு நடவடிக்கைகளில் அடங்கும் என்றும் அறிக்கை கூறுகிறது.

கலவரங்களுக்குப் பதிலளிப்பதற்கு போதுமான மற்றும் பயனுள்ள நடைமுறைகளை நிறுவுவதையும், குறிப்பாக பலத்தைப் பயன்படுத்துதல், கட்டளை அமைப்பு, பயிற்சி மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதையும் பரிந்துரைக்கிறது. (ஐ)

# ஒன்றரை இலட்சம் வாகனங்களுக்கு இலக்கதகடு வழங்க முடியாதநிலை!

### மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

கொழும்பு, செப். 07

புதிதாக பதிவு செய்யப்பட்ட ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு இலக்கத் தகடுகளை வழங்குவதற்கு முடியவில்லை என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 6 மாதங்களாக வாகன இலக்கத் தகடுகளை அச்சிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு இலக்கத் தகடுகள் கிடைக்கவில்லை என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வாகனங்களில் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 745 மோட்டார் சைக்கிள்கள், 26 ஆயிரத்து 894 கார்கள், 5 ஆயிரத்து 809 முச்சக்கர வண்டிகள், ஆயிரத்து 868 இரட்டை பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் 2 ஆயிரத்து 122 நில வாகனங்க என பல்வேறு பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேபோல், 25 ஆயிரத்து 526 மின்சார வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 3 ஆயிரத்து 222 மின்சார கார்கள், 5 வான்கள், 155 முச்சக்கர வண்டிகள் மற்றும் 22 ஆயிரத்து 133 மோட்டார் சைக்கிள்கள் அடங்கும் என்றும் கூறப்படுகிறது.

இலக்கத் தகடுகளை அச்சிடுவது நிறுத்தப்பட்டதன் காரணமாக, வாகன இலக்கத் தகடுகளைத் தயாரிக்கும் வர்த்தக நிலையங்களின் கட்டணங்களும் காலவரையின்றி அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## உரும்பிராயில் விபத்து; ஒருவருக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 07

உரும்பிராயில் பலாலி வீதியில் நேற்று சனிக்கிழமை நடந்த விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சைக்கிளை செலுத்திய ஒருவர் குறுக்கே வந்ததால் கார் சடுதியாக நின்றது. இந்த நிலையில், காரின் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதியது. இதில், மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து குறித்த விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

## நீர்த்தேக்கத்தில் நீராடிய மாணவன் நீரில் மூழ்கி பலி!

கொழும்பு, செப். 07

விக்ரோறியா நீர்த்தேக்கத்துக்கு சுற்றுலா சென்ற பாடசாலை மாணவர்கள் நீராடியபோது, அதில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. நுவரெலியா - நுகவெலவை சேர்ந்த 17 வயது மாணவனே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுடன் சுற்றுலா சென்றிருந்தார்.

இது தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## திருமலையில் தீ விபத்து; சுற்றுலா விடுதி சேதம்!

திருகோணமலை, செப். 07

திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து நேற்று முன்தினம் இரவு ஏற்பட்டுள்ளது.

மின்சார கோளாறு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தீயணைப்பு படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் தீ விபத்தால் ஓலையால் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பறை முற்றாக சேதமடைந்தது. எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## விபத்தில் ஒருவர் மரணம்

சிலாபம், செப். 07

வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் 10ஆவது மைல்கல் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் புத்தளம் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் 37 வயது நபர் ஒருவரே உயிரிழந்தார். விபத்து தொடர்பான விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org